★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 7 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 211 | Wednesday 07, September, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## மருத்துவ ஆலோசனைகளின்றி மருந்துகளை எடுக்க வேண்டாம்

### டாக்டர் ஹேமந்த ஹேரத் வேண்டுகோள்



அண்மைக் காலமாக நாட்டில் வைரஸ் காய்ச்சல் பரவி வருவதால் மருத்துவ ஆலோசனையின்றி விருப்பத்தின் பேரில் சிகிச்சை பெற வேண்டாம் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். 06

# நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட ஜனாதிபதி அழைப்பு




நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மற்றும் வகிக்காத அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் பகிரங்க அழைப்புவிடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று (06) பிற்பகல் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

'ஒன்றாக நாட்டைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் இவ்வருட மாநாட்டை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தியது.28 வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி, அரச தலைமைத்துவத்துடன் தனது ஆண்டு நிறைவு விழாவை நடத்தியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நடத்தப்பட்ட கட்சியின் முதலாவது விழா இது என்பதும் விசேட அம்சமாகும். 06

### சேவை மூப்பு பாதிக்கப்படாத வகையில் ஓய்வூதியத்துக்கு உரித்தான

## அரச ஊழியர்களுக்கு ஐந்து வருட சம்பளமற்ற விடுமுறை



அரச ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 05 வருடங்களுக்கு உள்ளூரில் சம்பளமற்ற விடுமுறை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விடுமுறை சேவை மூப்பு பாதிக்கப்படாத வகையில் ஓய்வூதியத்துக்கு உரித்தான அரச ஊழியர்களுக்கே வழங்கப்படவுள்ளது.

பொதுச் சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சரான பிரதமரினால் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்திற்கு நேற்று (06) அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

## அனர்த்தங்களை சமாளிக்க தயார் நிலையில் இருக்கவும்

### மாவட்ட செயலாளர்களுக்கு அரசு அறிவுறுத்தல்

**அனர்த்தம் தொடர்பாக அறிவிக்க 117 எனும் விசேட TP இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது**



அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னர் தேவையான முன்னேற்பாடுகளை செய்துகொள்ளுமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 06

### நாட்டின் எரிபொருள் விநியோக நடவடிக்கை;

## டொலர் பிரச்சினை தீரும் வரை நடைமுறை செயற்பாடே தொடரும்

### அதிகரித்து வழங்க முடியாத நிலையில் அரசு - கஞ்சன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அந்நிய செலாவணி தொடர்பான பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் வரை தற்போது நடைமுறையிலுள்ள முறைமைக்கு அமையவே எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்க முடியும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். தற்போது வாகனங்களுக்காக வழங்கப்படும் எரிபொருள் போதாது என்பதை நாம் உணர்கின்றோம். ஆனாலும் முக்கியத்துவத்திற்கு முதன்மையளித்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருளை வழங்கி வருகின்றோம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். 06

## 22வது திருத்த சட்டமூலத்திலுள்ள சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரண்

### மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**உயர்நீதிமன்ற வியாக்கியானத்தை பாராளுமன்ற சபாநாயகர் அறிவித்தார்**

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த சட்டமூல வரைபில் ஒரு சில ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானதாக உள்ளதால் அவற்றை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்பை நடத்துவதும் அவசியம் என்ற உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார். பாராளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா 06

## ஐந்து இலட்சத்தை கடந்த சுற்றுலா பயணிகள் வருகை

### சுற்றுலா அபிவிருத்தி சபை தெரிவிப்பு



நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. கடந்த 4 நாட்களில் இந்த மைல்கல் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இம்மாதத்தின் முதல் 4 நாட்களில் இந்தியாவில் இருந்து அதிகபட்சமாக 844 சுற்றுலா 06

## கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கோரி மனு

### இந்திய உயர் நீதிமன்றில் மதுரை நபர் தாக்கல்



கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி மேலும் ஒரு மனு இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள மனுக்களோடு சேர்த்து இதையும் விசாரிக்க நீதிபதி அனுமதி வழங்கினார். மதுரையை சேர்ந்த ரமேஷ் என்பவர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

கச்சதீவு ராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு 06

### போதுமான மா வழங்க இணக்கம்;

## பாணின் விலையை மேலும் அதிகரிக்காதிருக்க முடிவு



**பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு**

டொலர் நெருக்கடி நிலை காரணமாக இரண்டு பெரிய கோதுமை மா நிறுவனங்கள் உற்பத்தியை குறைத்தமையே கோதுமை மா தட்டுப்பாட்டிற்கு பிரதான காரணமாகுமென்றும் எதிர்காலத்தில் பாணின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வர்த்தக அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன கருத்து தெரிவிக்கையில், இரண்டு பெரிய நிறுவனங்கள் போதுமான 06

### இடைக்கால பட்ஜட் திட்டத்தை

## விரைந்து செயற்படுத்த விசேட குழு நியமனம்



இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை விரைவில் செயற்படுத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை விரைவில் செயற்படுத்துவதற்காக குழுவொன்று ஜனாதிபதி செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கே.டி.கமல் பத்மசிறி குறித்த குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதற்கமைய அமைச்சுகள், திணைக்களங்கள் 06

## சட்டவிரோதமாக கனடா செல்ல முயற்சித்த 11 இலங்கையர் கைது

### இந்தியா, கேரளா விடுதியில் வைத்து பொலிஸார் அதிரடி



படகு மூலம் கனடா செல்லும் திட்டத்துடன் கேரளாவின் கொல்லம் பகுதி விடுதியொன்றில் தங்கியிருந்ததாக கூறப்படும் இலங்கையர்கள் 11 பேரை கேரள பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கடந்த வாரம் சுற்றுலா விசாவில் தமிழகத்துக்கு வந்த இரண்டு இலங்கை பிரஜைகள் காணாமல்போயிருந்தனர். க்யூ பிரிவினர் (சிஐடியின் பிரிவு) அவர்களின் தொலைபேசி சமிக்ஞைகளைப் பின்பற்றி விசாரணைகளை முன்னெடுத்ததில், தமிழ் நாட்டிலிருந்து 06

## நஷ்டத்தில் இயங்கும் சில அரச நிறுவனங்கள்

### நிதியமைச்சின் கீழ் மறுசீரமைப்பு பிரிவு



நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மீளமைப்பு செய்வதற்கு மறுசீரமைப்புப் பிரிவொன்றை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அண்மையில் அவ்வாறானதொரு அலகொன்றை நிறுவுவதற்கு முன்மொழிந்தார்.

அதன்படி, நஷ்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் 06

## அரிசி ஏற்றிச் சென்ற லொறி கவிழ்ந்து விபத்து



**பாதையிலிருந்து விலகி வீட்டின் மீது வீழ்ந்தது**

நுவரெலியாவிலிருந்து பதுளை நோக்கி அரிசி ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று நுவரெலியா – பதுளை பிரதான வீதியின் ஹக்கல பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதோடு வீடொன்றையும் சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கனரக வாகன சாரதி படுகாயமடைந்து நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.பொலன்னறுவையிலிருந்து வெலிமடை பதுளை மற்றும் நுவரெலியா போன்ற 06

### ஆட்டோக்களுக்கான பெற்றோல்;

## எந்தவொரு நிலையத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்

**கட்டுப்பாட்டை தளர்த்தியது அமைச்சு**



முச்சக்கர வண்டிகளுக்கு நாட்டிலுள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்தும் எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இதன்படி, முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து மாத்திரம் 06

## ஆறுகளின் நீர் மட்டம் உயர்வால் வெள்ள அபாயம்

### நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு



மத்திய மலைநாட்டில் பெய்து வரும் கடும் மழையினால் மேல் கொத்மலை, லக்ஷபான மற்றும் கெனியன் நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதன்படி, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் ஒரு வான் கதவும், லக்ஷபான மற்றும் கனியன் நீர்த்தேக்கங்களில் தலா 2 வான் கதவுகளும் நேற்று முன்தினம் (5) இரவு முதல் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டார். 06

## வடக்கு,கிழக்கு மக்களுக்கென வலம்புரி அதிஷ்ட இலாபச்சீட்டு

### அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிமுகம்

**மர்லின் மரிக்கார்**





வரலாற்றில் முதற்தடவையாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கென புதிய அதிஷ்ட இலாபச் சீட்டொன்றை அபிவிருத்தி லொத்தர் சபை நேற்று உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்தது. வலம்புரி என்ற பெயரில் 06

# ஐ.தே.கவின் 76வது ஆண்டு விழா















ஐக்கிய தேசிய கட்சியின் 76வது ஆண்டு விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.



## 2023 ஆண்டுக்கான இலவச பாடப் புத்தகங்களை அச்சிட
# கல்வியமைச்சு 1648 கோடி ரூபா செலவிட தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

### 45% அச்சக கூட்டுத்தாபனத்திற்கு, 55% தனியாருக்கு

2023 கல்வியாண்டுக்காக பாடசாலைகளுக்கான இலவச பாடப் புத்தகத்தை அச்சிடுவதற்கு 1648 கோடி ரூபாவை செலவிடவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க புதிய கல்வியாண்டுக்கு தேவைப்படும் பாடப்புத்தகங்களில் 45 வீதத்தை அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்திலும் மேலும் 55 வீதமான பாடப் புத்தகங்களை தனியார் அச்சகங்களிலும் அச்சிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, இலவச பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு தேவையான கடதாசிகளை இந்திய கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## நகர்வலம்



இலங்கை பொலிஸின் 156 வது வருடத்தினை முன்னிட்டு இஸ்லாமிய சமய நிகழ்வுகள் 3ஆம் திகதி கொழும்பு 7, தெவட்டகஹ ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரட்ன கலந்து கொண்டதோடு பள்ளிவாசலின் நிர்வாக சபைத் தலைவர் றியாஸ் சாலி பொன்னாடை போர்த்தி வாழ்த்துவதையும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஏ.எம் நவாஸ், ஜவ்பர், உதவிப் பொலிஸ் அதிகாரிகளும் படத்தில் காணப்படுகின்றனர். (படம் அஷ்ரப் ஏ சமத்)

# சாஹிரா மாணவி நஜூஹா மருத்துவ துறைக்கு தெரிவு

திறப்பனை தினகரன் நிருபர்



அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலை மாணவி ஜே.எப்.நஜுஹா, இம்முறை வெளியான க. பொ.த ( உயர்தர ) பரீட்சை முடிவுகளின் பிரகாரம் அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து பரீட்சைக்கு தோற்றி உயிரியல் துறையில் 02 ஏ, 01 பி சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் 30 வது இடத்தைப் பெற்று, மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர் நாச்சியாதீவு எஸ்.ஜெபர்தீன் அநுராதபுரம் ஜயசிரிபுர,காலஞ்சென்ற சித்தி பாயிஸா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.

# மாத்தறை மாவட்டத்தில் 08 மணிநேர நீர் வெட்டு

(பேருவளை விசேட நிருபர்)



மாத்தறை மாவட்டத்திலுள்ள வெலிகம நீர் வழங்கல் திட்டத்தின் கனங்கே நீர் உள்ளீர்ப்பு நிலையத்தில் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், இன்று 07ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9 மணி முதல் பி.ப. 5 மணி வரையிலான 8 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது. வெலிஹிந்த, தெனிப்பிட்டிய, வெலிப்பிட்டிய மற்றும் பொல் அத்து மோதர ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும். இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# எகிப்து காலநிலை மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் நசீர் அஹமட்டிற்கு அழைப்பு

## எகிப்து தூதுவர் நேரில் சந்தித்துப் பேச்சு



இலங்கைக்கான எகிப்து தூதுவர் மேஜர் மொஸ்லிஹ் (05) சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட்டை சந்தித்தார்.

நவம்பர் (06) முதல் (18) வரை எகிப்தில் நடைபெறவுள்ள காலநிலை மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்த தூதுவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சிமாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாநாடு COP27 பற்றியும் இச்சந்திப்பில் இவ்விருவரும் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில், அமைச்சரின் ஆலோசகரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கருணாசேன ஹெட்டியாராய்ச்சி மற்றும் அமைச்சின் முக்கிய அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

# ரயில் மோதி யாசகர் பலி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் முந்தல் பிரதேசத்தில் ரயில் மோதி யாசகர் ஒருவர் நேற்று முன்தினம் (05) உயிரிழந்துள்ளார்.

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த பயணிகள் ரயிலில் மோதியே குறித்த யாசகர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பகுதிக்கும் மங்கள எளிய பகுதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலேயே குறித்த யாசகர், ரயில் பாதைக்கு அருகே நின்றுகொண்டிருந்த போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு உயிரிழந்த குறித்த யாசகரின் சடலம், ரயில் ஊழியர்களால் முந்தல் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யாசகர் யார் என்பது தொடர்பில் அடையாளம் காணப்படவில்லை என முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

# வலம்புரி கவிதா வட்ட 79 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 79 ஆவது கவியரங்கு பாரதி நினைவரங்கில் எதிர்வரும் (10) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கவிதாயினி எஸ். யூ. கமர்ஜான் பீபி தலைமையில் கவியரங்கு நடைபெறும்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர்

நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது

இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்)

077 738 8149 அல்லது

ஈழகணேஷ் (பொருளாளர்)

071 756 3646 உடன்

தொடர்பு கொள்ளவும்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 7 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
05 முதல் 08 வரை
சுபஹ் - 04.47
ளுஹர் - 12.12
அஸர் - 03.13
மஃரிப் - 06.16
இஷா - 07.27

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆவணி 22
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: துவாதசி



# எதிர்க்கட்சி 2ஆம் வகுப்பு அரசியல் செய்கிறது

### சபையில் மஹிந்தானந்த அலுத்கமகே எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மந்தபோசன வேலைத் திட்டத்திற்காக அரசாங்கம் பெருமளவு நிதியை ஒதுக்கி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் உலக சுகாதார நிறுவனத்தின் 50 பில்லியன் நிதியில் அதற்கான திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் மஹிந்தானந்த அலுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மந்தபோசனம் தொடர்பான பிரேரணையை நாம் வரவேற்கின்றோம் எனினும் எதிர்க்கட்சி அதனை கொண்டு வந்த நோக்கம் தவறானது என்றும் அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சி எப்போதும் இரண்டாம் வகுப்பு அரசியல் செய்யவே முயற்சிக்கிறது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம். பி ரோஹினி கவிரத்ன முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு

06

மே. 09 வன்முறையில் நிட்டம்புவ பகுதியில்

# உயிரிழந்த MP யின் குடும்பம் ஜனாதிபதி ரணிலை சந்தித்து கலந்துரையாடியது

நிட்டம்புவ பிரதேசத்தில் கடந்த மே 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் மனைவி மற்றும் 2 பிள்ளைகள் நேற்று முன்தினம் (05) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துரையாடினர்.

குறித்த சம்பவத்திற்கு தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிள்ளைகளின் கல்வி உள்ளிட்ட குடும்ப நல விடயங்கள் குறித்து கேட்டறிந்ததோடு, பிள்ளைகளுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தமக்கு அறிவிக்குமாறு கூறினார்.

அந்த பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் குடும்ப நலனுக்காகவும் அரசாங்கத்தின் நன்கொடையின் ஊடாகவோ தனிப்பட்ட முறையிலோ எந்தவொரு உதவியையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த சம்பவத்தில் உயிரிழந்த அமரகீர்த்தி அத்துகோரலவின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் பொலிஸ் சார்ஜன்ட் ஜயந்த குணவர்தனவிற்கு பொலிஸ் வெகுமதி நிதியிலிருந்து ஜனாதிபதியினால் நிதியுதவி வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கிய கப்பல் வருகிறது

### நவம்பர் முதல் வாரம் கொழும்புக்கு வரும்



அமெரிக்காவினால் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட P 627 ஆழ்கடல் ஊடுருவல் கப்பல் அமெரிக்காவின் சியெட்டெல் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது.

2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்காவின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட இந்தக் கப்பல், கடற்படையின் செயற்பாட்டுத் தேவைக்கேற்ப

06

## குரல் பதிவு மூலம் கொவிட் தொற்றை கண்டறியும் App.

### கண்டுபிடித்து விஞ்ஞானிகள் சாதனை



நோயாளிகளின் குரல் பதிவு மூலம் தொற்றை உறுதி செய்யும் செயற்கை நுண்ணறிவு மூலம் செயற்படும் புதிய செயலியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி செயலி குறிப்பிட்ட நபரின் மருத்துவ வரலாறு, புகைபிடிக்கும் நிலை போன்ற சில அடிப்படை தகவல்களை பதிவு செய்து, பின்னர் அவர்களின் சில சுவாச ஒலிகளையும் பதிவு செய்ய வேண்டும்.

அதன்படி மூன்று முறை இருமல், மூன்று முதல் ஐந்து முறை வாய் வழியாக ஆழமாக சுவாசித்தல் மற்றும் திரையில் ஒரு சிறிய வாக்கியத்தை மூன்று முறை வாசிப்பது ஆகியவை இதில் அடங்கும். இவற்றின் மூலம் குறிப்பிட்ட அந்த நபருக்கு தொற்று இருக்கிறதா? என்பதை துல்லியமாக இந்த செயலி தெரிவிக்கும் என நெதர்லாந்தை சேர்ந்த ஆய்வாளர் வபா அல்பவி தெரிவித்தார்.

இந்த செயலி 89 சதவீதம் அளவுக்கு துல்லியமாக முடிவை காட்டும் என தெரிவித்த விஞ்ஞானிகள், பிற பரிசோதனை முறைகளை ஒப்பிடுகையில் மிகவும் மலிவானது என்றும், குறைவான வருவாய் கொண்ட நாடுகளில் இவற்றை எளிதாக பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளனர்.

# இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவும்

### மீண்டும் உறுதியளித்த இந்தியா



அண்மைக்காலங்களில் இலங்கைக்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர் உதவிகளை இந்தியா வழங்கியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் இந்தியாவிற்கான வதிவிட பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் தெரிவித்துள்ளார்.

இந்தியா, நெருங்கிய அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை வழங்குவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். 2017ஆம் ஆண்டு இந்தியா ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து ஸ்தாபித்த அபிவிருத்தி சகோதரத்துவ நிதியத்தின் மூலம் தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் 51 நாடுகளில் 66 திட்டங்களுக்காக ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக வதிவிட பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட

## புதிய ரோட்டரி கழக தலைவராக திருமதி ஷிரோமி தெரிவு




2022 தொக்கம் 2023 ஆண்டுகளுக்கான ரோட்டரி சங்கம் நிர்வாகிகளை தெரிவு செய்யும் கூட்டம் மாத்தளை கிராண்ட் மவுண்டன்ஸ் விடுதியில் அண்மையில் நடைபெற்றது. ரோட்டரியின் சர்வதேச தலைவராக திருமதி ஜெனிபர் ஜோன்ஸ் தெரிவாகியுள்ளார். பெண் ஆளுமைகள் என்ற அடிப்படையில் ரோட்டரி கழக வரலாற்றில் ஒரே சந்தர்ப்பத்தில் முக்கிய மூன்று பதவிகளில் தெரிவாகியுள்ளதோடு ஜெனிபர் ஜோன்ஸுக்கு அடுத்தபடியாக இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இரு நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் புபுது டி சில்வா இலங்கையின் மூன்றாவது ரோட்டரி கவர்னராக பதவியேற்றுள்ளார். மாத்தளை மாவட்டத்தின் முதல் பெண் ரோட்டரி தலைவராக சென்ட்ரல் ரோட்டரி கிளப்பின் தலைவராக திருமதி ஷிரோமி கோவிந்தராஜ் தெரிவாகியுள்ளார்.

06



பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒற்றுமை மற்றும் நல்லெண்ணத்தின் அடையாளமாக இலங்கை சிலோன் தேயிலையை (05) நன்கொடையாக வழங்கியுள்ளது. வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் உமர் ஃபரூக் புர்கியிடம் வெளிநாட்டமைச்சில் வைத்து கையளித்தார்.

# நாட்டில் போசாக்கின்மையால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டம் கிளிநொச்சி

### அரசாங்கத்தின் விசேட வேலைத் திட்டம் அவசியம்: ஸ்ரீதரன் எம்பி சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் போசாக்கின்மையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மாவட்டம் கிளிநொச்சி என்பதுடன் அந்த மாவட்டத்திற்காக அரசாங்கம் விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எஸ். ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மந்தபோஷணை தொடர்பில் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கடந்த 30ஆண்டுகளாக, குறிப்பாக யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் கழிந்த பின்பும் வடக்கு, கிழக்கில் குழந்தைகள் போஷாக்கின்மையோடுதான் பிறந்திருக்கின்றன.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் விதித்த மோசமான பொருளாதார தடைகளினால்தான் தமிழ் மக்கள் போஷாக்கற்றவர்களாக வாழ்ந்தார்கள். உரம், எரிபொருள், போஷாக்கு உணவுகள் அங்கு அனுப்பப்படவில்லை. இதனால் பல குழந்தைகள் போஷாக்கின்மையாலும் பட்டினியாலும் உயிரிழந்துள்ளார்கள்.

நாட்டில் போஷாக்கின்மையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு முதலிடத்தில் இருப்பது கிளிநொச்சி மாவட்டமே. அதற்கான மாற்றுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதா என கேட்க விரும்புகின்றேன்.

இலங்கைக்கடலில் பிடிக்கப்படும் போஷாக்கான மீனை வடக்கு மக்கள் சாப்பிடுகின்றார்களா? வடக்கில் தற்போது கடலட்டைகள் வளர்ப்பதற்கான இடங்கள் ஒதுக்கப்படுகின்ன்றன. சீன நாட்டின் கோதாவிலே அங்கிருக்கின்ற சில முகவர்கள் ஊடாக அதற்கான காணிகள் பிரித்து வழங்கப்படுகின்றன. இதனால் .

06

# மலையக மக்களுக்கான விசேட நிவாரணத் திட்டம்

### ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் சபையில் வேலுகுமார் எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையகத்தின் மந்த போசணை தொடர்பில் சபையில் தற்போது பேசுகின்ற நிலையில் அங்கு பட்டினிச் சாவு தொடர்பில் பேசும் நிலையை ஏற்படுத்த வேண்டாம் என அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதாக வேலுகுமார் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையகப் பெருந்தோட்டங்கள் தொடர்பில் சிறந்த அனுபவத்தைக் கொண்டவர் அந்த வகையில் மலையகத்திற்கான விசேட வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேலுகுமார் எம் .பி சபையில் கேட்டுக் கொண்டார்.



பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மந்தபோசனை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

தோட்டத் தொழிலாளர் ஒருவருக்கு தற்போது ஆயிரம் ரூபாவை விட குறைந்த சம்பளமே கிடைக்கின்றது. 25 நாட்கள் வேலை செய்தாலும் 25 ஆயிரம் ரூபாவை

06



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 22ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 10

### குறள் தரும் சிந்தனை

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து

*மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.*

## கோதுமைமாவுக்கு செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தும் முயற்சி!

இலங்கை மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தில் கோதுமைமா முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றது. இந்நாட்டினரின் பிரதான உணவுப் பொருளாக அரிசி விளங்குகின்ற போதிலும் அதற்கு அடுத்ததாக கோதுமைமா விளங்குகின்றது. மலையகப் பெருந்தோட்ட மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தில் அரிசியை விடவும் கோதுமைமா முக்கியத்துவம் பெறுகின்றது.

கோதுமை இந்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய ஒன்றல்ல. அது முற்றிலும் இறக்குமதி செய்யப்படக் கூடியது. அப்படி இருந்தும் இந்நாட்டு மக்களின் உணவுப் பழக்கத்தில் கோதுமை மா முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. இன்றைய காலகட்டத்தில் இந்நாட்டு மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பெரும்பாலான உணவுப் பண்டங்களின் மூலப்பொருளாக கோதுமைமாவே அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கோதுமை கடந்த 30, 40 வருடங்களுக்குள் தான் இந்நாட்டு மக்கள் மத்தியில் இவ்வாறான முக்கியத்துவத்தை பெற்று இருக்கின்றது. கோதுமை இறக்குமதி செய்யப்படும் ஒரு பொருளாக இருப்பதால் பிராந்திய மற்றும் உலகளாவிய நெருக்கடிகள் அதன் கேள்வியிலும் அதனைப் பெற்றுக் கொள்வதிலும் அவ்வப்போது தாக்கம் செலுத்தக் கூடியதாகவே இருந்து வருகின்றது.

அந்த வகையில் தற்போதைய உக்ரைன் மீதான ரஷ்ய போர் உலக சந்தைக்கு கோதுமை வழங்கலில் நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கின்றது. உலகிற்கு தேவையான கோதுமையில் மூன்றிலொரு பங்கை ரஷ்யாவும் உக்ரைனும் தான் வழங்கக் கூடியனவாக இருந்து வந்திருக்கின்றன. இவ்விரு நாடுகளும் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் கோதுமையைத் தொடராக உலக சந்தைக்கு வழங்குவது அந்நாடுகளுக்கு சவால் மிக்கதாக அமைந்துள்ளது. இது கோதுமைக்கான கேள்வியில் ஏற்றத் தாழ்வையும் அதிக தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதே நேரம் இலங்கை அந்நிய செலாவணி பற்றாக்குறைக்கு தற்போது முகம் கொடுத்துள்ளது.

அதனால் சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டிலும் கோதுமை தொடர்பில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ள போதிலும், இந்நாட்டில் கோதுமைக்கு தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்காத வண்ணம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் தற்போதைய சூழலில் நாட்டுக்கு தேவையான கோதுமையை துருக்கி, துபாய் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கேற்ப தருவிக்கப்படும் கோதுமைமா எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடைய உள்ளது.

இதேவேளை ஒரு மாதத்திற்குத் தேவையான கோதுமை மாவை உற்பத்தி செய்யக் கூடிய கோதுமை தம்மிடம் கையிருப்பில் இருப்பதாக இலங்கையின் இரண்டு கோதுமை மா உற்பத்தி நிறுவனங்கள் அறிவித்திருக்கின்றன. இதன்படி இந்நாட்டில் கோதுமைமாவுக்கு எவ்விதத்திலும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை.

இருந்த போதிலும் கோதுமை தொடர்பில் செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதன் விலையை அதிகரிப்பதற்கு ஒரு சில தரப்பினர் முயற்சிப்பதாகத் தெரிகிறது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் அழுத்தங்களுக்கும் மக்கள் முகம் கொடுத்துள்ள சூழலில் கோதுமைமாவுக்கு விலையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி எவ்விதத்திலும் நியாயப்படுத்தவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாததாகும்.

அதனால்தான் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் நளின் பெர்னாண்டோ, 'தற்போதைய சூழலில், கோதுமைமாவின் விலையை அதிகரிப்பதற்கு காரணம் எதுவும் கிடையாது. அதனால் வழமையான விலைக்கே கோதுமை மாவை விற்பனை செய்ய வேண்டும். அதனை மீறி கோதுமை மாவின் விலையை அதிகரித்தால் அதற்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுக்கும்' என்றுள்ளார்.

இது உண்மையில் மக்களால் வரவேற்கப்படும் நடவடிக்கையாகவே அமையும். மக்கள் என்னதான் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தாலும், சிலர் தம் அற்ப இலாபத்தை இலக்காகக் கொண்டு செயற்படுவதில் குறியாக இருப்பதையே கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கான முயற்சி வெளிப்படுத்தி நிற்கின்றது. அதற்கு ஒரு போதும் இடமளிக்கப்படக் கூடாது.

அதேநேரம், 'எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும், உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட மாட்டாது' என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்திருக்கின்றனர். அரசாங்கம் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நிவாரணத்தை இடைத்தரகர்கள் மறுப்பது போன்ற அறிவிப்பாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது. இது தொடர்பிலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் மக்களுக்கான நிவாரணமும் சலுகையையும் அவர்களை உரிய முறைப்படி சென்றடைய வழிபிறக்கும்.

editor.tkn@lakehouse.lk

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் திங்களன்று தீர்த்தோற்சவம்

மட்டுநகரிலிருந்து தெற்கே மண்முனைத் துறையினூடாக ஒன்பது மைல் தொலைவில் கொக்கட்டிச்சோலை கிராமம் அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் கொக்கட்டி அல்லது கொக்கு நெட்டி என்னும் மரங்கள் நிறைந்தமையால் இக்கிராமத்திற்கு கொக்கட்டிச்சோலை எனும் இப்பெயர் வந்தது.

இயற்கை எழில்மிக்க இக்கிராமத்தில் நிழல் மரங்கள் நிறைந்த திருவீதியிலே தான்தோன்றீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. மட்டக்களப்பிலே உள்ள பழைமையான சிவன் கோயில் என்ற பெருமையும் திருப்படைக் கோயில் அல்லது தேசத்துக்கோயில் என்ற பெருமையும் இககோயிலுக்கு உள்ளன. இக்கோயிலில் இறைவன் சுயம்புலிங்கமாகத் தானே தோன்றி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

பண்டையக்கால அரசர்களது மதிப்பும் மானிய சீர்வரிசைகளும் பெற்றவையாக உள்ள கோயில்கள் சில மட்டக்களப்பில் உள்ளன. இவற்றுள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் ஒன்றாக விளங்குகின்றது. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் பற்றி 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் நூலில் கூறப்படுகின்றபடி இவ்வாலயம் பற்றி அறியக் கூடியதாக உள்ளது.

மேலும் இக்கோயிலின் ஆரம்ப வழிபாடு பற்றி செவிவழி கதையொன்று நிலவி வருகின்றது. இக்கதையின்படி வேடுவர்களே முதன்முதலில் இங்கு வழிபாட்டை ஆரம்பித்தனர் என்று சொல்லப்படுகின்றது. தேன் தேடிச் சென்ற வேடர் சிலர் அங்கிருந்த கொக்கட்டி மரமொன்றில் தேனிருக்கக் கண்டு மேலும் அவதானித்த போது அம்மரத்தின் அடியில் ஒரு லிங்கம் இருக்கக் கண்டனர்.

அன்று முதல் கொத்துப்பந்தலிட்டு தமது வழிபாட்டு முறைப்படி பூசை செய்து வரலாயினர் என்று சொல்லப்படுகின்றது. மேலும் கதிர்காமம் யாத்திரைக்கு வந்த கொக்கட்டியார் என்னும்



இந்திய நாட்டைச் சேர்ந்த தபோதனர் இங்கு சமாதி இருத்தப் பெற்றதாயும் சிலர் கூறுவர். இந்த லிங்கத்தை முதன் முதலில் கண்ட வேட குலத் தலைவன் திடகன் என்றும் 'மட்டக்களப்பு மான்மியம்' கூறுகின்றது.

கட்டட அமைப்பை நோக்கின்ற போது இப்பகுதிகளில் கலிங்கரின் செல்வாக்கு அதிகரித்திருந்தமை தெளிவாகின்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே தான்தோன்றீஸ்வரர் கோயில் கட்டப்பட்டுள்ளது. திருக்கோயிலின் கட்டட அமைப்பைக் கொண்டு அது திட்டமாக பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்கின்றனர் வரலாற்று ஆசிரியர்கள்.

இவ்வாலயத்தில் குருக்கள் பரம்பரையினர் சைவத்தைச் சேர்ந்த 'சங்கமர்' ஆவர். சங்கமர் என்பது முழுமை பெற்ற அல்லது இலட்சியத்தை அடைந்து விட்ட ஆன்மா என பொருள்படுகின்றது.

இங்கு பொன்னாச்சிகுடி, வைத்தியனார்குடி, அத்தியாகுடி என்ற மூன்று குடிகளும் இக்கோயிலுடன் தொடர்புடையோராக உள்ளனர்.

இக்குடிப் பிரிவினர்கள் தாங்கள் குளக்கோட்டனால் ஆலய சேவைக்கென கொண்டு வரப்பட்ட பரம்பரையினராவர். தொண்டூழியங்களுக்கு நெல்வயல்கள் மானியமாக கொடுக்கப்பட்டு வந்தமையும், நெல் படியாகக் கொடுக்கப்பட்டு வந்ததையும் அறியக் கூடியதாகவுள்ளது. இக்கோயிலின் பரிபாலனம் பழைமை வாய்ந்ததாக மூன்று வண்ணக்குமாரை கொண்டதாக காணப்படுகின்றது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது வெகுவிமரிசையாக நடைபெறுகின்றது. கொடியேற்றமானது 29.08.2022 ஆம் திகதி நடைபெற்றது. எதிர்வரும் 11.09.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேரோட்டம் நடைபெற்று, 12.09.2022 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெற்று மஹோற்சவம் இனிதே நிறைவுபெறவிருக்கின்றது.

இலக்கிய வித்தகர்
**நாராயணபிள்ளை நாகேந்திரன்...**
ஓய்வுநிலை அதிபர், களுவாஞ்சிகுடி

# இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மற்றுமொரு முன்மொழிவு செயற்படுத்தப்படுகிறது

அரச நிறுவனங்களில் குவிந்துள்ள பயன்படுத்த முடியாத (கழிவு) பொருட்களை (Scrap Material) அகற்றுவதை துரிதப்படுத்த ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

பயன்படுத்த முடியாத (கழிவு) பொருட்களை அகற்றும் முழு செயல்முறையையும் மேற்பார்வையிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2022 இடைக்கால வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய இந்த செயல்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

திறைசேரியின், கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தின், கொம்ப்ரோலர் ஜெனரல் ரம்யா காந்தியின் தலைமையில், இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக, திறைசேரியின், அரச நிதித் திணைக்கள, மேலதிக பணிப்பாளர் நாயகம் எஸ்.யு. சந்திரகுமாரன் மற்றும் திறைசேரியின், அரசுடமை நிறுவனத் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் ஜே.எம். எஸ்.என். ஜயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயன்படுத்த முடியாத (கழிவு) பொருட்களை உரிய நேரத்தில் அகற்றாததால் அரசாங்கத்துக்கு கணிசமான வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும், இதுபோன்ற பொருட்களால், அலுவலக வளாகங்கள் மற்றும் அரச கட்டடங்களில் உள்ள இடவசதி குறைந்துள்ளது. எனவே குறித்த பொருட்களை உடனடியாகவும் முறையாகவும் அப்புறப்படுத்துமாறு ஜனாதிபதியின் செயலாளர் இந்தக் குழுவிற்கு அறிவித்துள்ளார்.

பின்வரும் வழிமுறையைப் பின்பற்றி பயன்படுத்த முடியாத (கழிவு) பொருட்களை அகற்றும் நடைமுறையை நிறைவு செய்யுமாறு குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- அனைத்து நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் வழங்குதல்.
- நிறுவனங்களினால் (அமைச்சுகள்/ திணைக்களங்கள்/ நிறுவனங்கள்) குவிந்துள்ள பயன்படுத்த முடியாத (கழிவுப்) பொருட்களை அடையாளம் காணுதல்.
- நிறுவனங்களினால், அகற்றப்பட வேண்டிய பொருட்களின் பட்டியலைத் தயாரித்தல்.
- ஒவ்வொரு நிறுவனமும் குறித்த மதிப்பீட்டு சபையொன்றை நியமித்தல்.
- ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் அகற்றப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட அளவுகளின் பட்டியல்களைப் பெறுதல்.
- அகற்றல் செயல்முறையை கண்காணித்தல்.
- விற்பனைக்குப் பிறகு பொருட்கள் அகற்றுவதை உறுதி செய்தல்.
- அனைத்து நிறுவனங்களின் பயன்படுத்த முடியாத (கழிவுப்) பொருட்களையும் அகற்றுவது தொடர்பில் ஒருங்கிணைந்த அறிக்கையை தயாரித்தல்.

இதன்படி, 2022 டிசம்பர் மாதம் 05ஆம் திகதி அல்லது அதற்கு முன், பயன்படுத்த முடியாத (கழிவு) பொருட்களை அகற்றும் பணிகளை நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தெற்கிலிருந்து வடக்குக்கு இனநல்லுறவுப் பயணம்

தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கான இனநல்லுறவுப் பயணமொன்று அன்மையில் அநுராதபுரம் தலாவ பகுதியிலிருந்து வடக்கின் கிளிநொச்சி பகுதிக்கு மேற்கொள்ளப்பட்டது. சமூகங்களுக்கிடையில் இனநல்லுறவினை ஏற்படுத்தும் நோக்கில் வடமத்திய மாகாண கரிடாஸ் செத்சவிய நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரலுக்கமைவாகவே அநுராதபுரம் தலாவ பகுதியிலுள்ள சிங்கள மக்கள் கிளிநொச்சிக்கான உறவுப் பயணத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இக்குழுவில் பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். வடக்கின் கிளிநொச்சி நோக்கிய பயணம் அன்று காலை 7.00 மணியளவில் தலாவயில் இருந்து ஆரம்பமாகி 10.30 மணியளவில் கிளிநொச்சியை சென்றடைந்தது. இதன்போது தமிழ் மக்கள் தங்களது தமிழ் கலாசார முறைப்படி ஆராத்தி எடுத்து, மலர்கொத்து கொடுத்து, நெற்றியில் திலகமிட்டு, இனிய புன்னகையுடன் சிங்கள மக்களை வரவேற்றுள்ளனர். தேநீர் உபசாரமளித்து இரு சாராரும் மகிழ்ந்ததன் பின்னர், இரு சகோதர மொழியினரும் சேர்ந்து கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி மகிழ்ந்தனர். அதைத் தொடர்ந்து தமிழ்_ சிங்கள நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. மறுநாள் தென்பகுதி சிங்கள மக்கள் வடபகுதி மக்களது வீடுகளுக்கு சென்று உறவுகளை புதுப்பித்து கொண்டனர்.

ஒரே குடும்பத்தினர் போன்று இரு இனங்களும் பழக வேண்டும் என்று இருதரப்பினரும் வலியுறுத்தினர். இவ்வாறான உறவுகள், அனுபவங்கள் இரு சகோதர மக்களுக்கும் ஒரு புதிய அனுபவமாக இருந்தனது. இதுபோன்று முன்னோர் காலத்திலும் அமைந்திருந்தால் எமது நாட்டில் கொடியதொரு யுத்தம் இடம்பெற்று இன, மத, மொழி வேறுபாடு ஏற்பட்டிருக்காது என்ற விடயத்தினை இரு சகோதர மொழி மக்களும் உணர்ந்து கொண்டனர். இது போன்ற உறவுப்பயனங்கள் மேலும் தொடர்ந்தால் எமது இளம் சமுதாயமும் எப்பொழுதும் ஒற்றுமையாக ஒரே தாய் பிள்ளைகள் போன்று வாழ முடியுமென அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.







**ஏ.பிர்தௌஸ்...**
*(அநுராதபுரம் தினகரன் நிருபர்)*

# அதிரடிப் படையின் 38 ஆவது நினைவு தினம் கட்டுக்குருந்தையில் அனுஷ்டிப்பு

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சிறப்பு படைப் பிரிவான விஷேட அதிரடிப் படையின் (Special Task Force) 38 ஆவது நினைவு தினம் களுத்துறை ,கட்டுக்குருந்தையிலுள்ள அதிரடிப்படை பயிற்சிப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கலந்து கொண்டார். அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாரச்சி, பொலிஸ் மாஅதிபர் ஸீ. டீ. விக்ரமரத்ன, விஷேட அதிரடிப்படையின் தளபதி பிரதி பொலிஸ் மாஅதிபர் வருண ஜயசுந்தர, களுத்துறை நகரபிதா ஆமிர் நஸீர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் 1983 ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட விஷேட அதிரடிப் படைப் பிரிவானது திணைக்களத்தின் பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட சிறப்புப் படைப் பிரிவாக விளங்குகின்றது. நாட்டில் அமைதி, சமாதானத்தை நிலைநிறுத்தி மக்களைப் பாதுகாப்பதிலும் குற்றத் தடுப்பு, போதைப்பொருள் தடுப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளிலும் இந்த விஷேட படைப் பிரிவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது.

மூன்று தசாப்த யுத்த காலத்தில் தேசத்தைப் பாதுகாக்கும் போராட்டத்திலும் பொலிஸ் விஷேட அதிரடிப்படைப் பிரிவின் பங்களிப்பு முக்கியமானதாக விளங்கியது. யுத்த காலத்தில் 1984 செப்டெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அதிரடிப்படை மீதான தாக்குதலின் நினைவாக அதிரடிப்படை ரணவிரு ஞாபகார்த்த தினம் செப்டெம்பர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பிரதான ரணவிரு ஞாபகார்த்த தினம் அனுஷ்டிப்பு நிகழ்வு பொலிஸ் விஷேட அதிரடிப் படையின் கட்டுக்குருந்த பயிற்சிப் பாடசாலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில்கடந்த கால யுத்தத்தில் தேசத்துக்காக உயிர் நீத்த மற்றும் அங்கவீனமடைந்த படைவீரர்கள் அபிமானத்துடன் நினைவுகூர்ப்பட்டனர்.





**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
*(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*

# வீணை மேதை எஸ்.பாலச்சந்தருடன் நெருங்கிப் பழகிய இனிய நினைவுகள்!

## லண்டனில் வாழும் டொக்டர் எஸ். நவரத்தினம் தனது அக்கால அனுபவங்களைப் பகிர்கிறார்

**தமிழ்க் கலையை தன் வாழ்வோடு இணைத்துக் கொண்டு 55 ஆண்டு காலத்திற்கு மேலாக இங்கிலாந்தில் டொக்டர் எஸ். நவரத்தினம் மேற்கொள்கின்ற வைத்தியப் பணி தமிழர்களுக்கு பெருமை சேர்க்கின்றது. RHEOMATOLOGIST மருத்துவ வல்லுனராகத் திகழும் டொக்டர் சீனியர் நவரத்தினம், இசை என்ற இன்ப வெள்ளத்தில் நீச்சலடிக்கின்ற 'தீவிர' ரசிகனாக வாழ்ந்து வருகிறார். தமிழ்நாட்டில் பிரபலமான கலைஞர்களுடன் அவர் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கின்றார்.**

தமிழ்நாட்டிலிருந்து இசை மேதைகளை லண்டனுக்கு தனது சொந்தச் செலவில் அழைத்து, ரசிகர்களை ரசிக்க வைக்கும் பணியை செய்து வருகிறார். அரசியல் முதல் ஆன்மீகம் வரை புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து செயற்படுகின்ற இந்த இனியவரான டொக்டர் எஸ். நவரத்தினம் தாயக உறவுகள் குறித்து அக்கறை கொண்டவர். தமிழகத்தில் சிறப்பு முகாம்களில் வாழும் மக்களோடு நெருங்கிய தொடர்புடையவர். அவர்களது கல்வி, சமூக மேம்பாடு குறித்து எப்போதும் சிந்திக்கும் டொக்டர் நவரத்தினம் தமிழக வீணைக் கலைஞரான எஸ். பாலச்சந்தர் பற்றி மனப்பதிவுகளை வாசகர்களுக்காக பகிர்கின்றார்.

வீணை என்றால் தமிழ் இசை ரசிகர்களின் கண்முன்னால் வந்து நிற்பவர் எஸ். பாலச்சந்தர். உலக மகாவித்தகரான அவருடன் பழகிய நினைவுகளை வைத்தியகலாநிதி நவரத்தினம் பின்வருமாறு சொல்கிறார்.

"அந்த மேதை மறைந்து பல ஆண்டுகளாகின்றன. விம்பிள்டன் பிள்ளையார் கோயில் தொடக்க காலம். ஆலயத்தை நிறுவிய இரத்தினசிங்கம் ஆலய விழாவுக்காக அவரை அழைத்திருந்தார். தனது மனைவி சாந்தாவுடன் வந்திருந்தார். அவரை என் நண்பர் இரத்தினசிங்கம் அறிமுகப்படுத்தி வைத்தார். அந்தச் சமயம், ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை இரண்டு வாரம் மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தார். திடீரென்று அவர் மனைவிக்கு சிறு சுகவீனம் ஏற்பட்டு விட்டது. சிகிச்சை அளித்தேன். குறிப்பிட்டபடி பயணத்தை மேற்கொள்ள முடிந்தது. பாலசந்தருக்கு அது மகிழ்ச்சியை அளித்தது. இதனால் என் மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டது.

இதன் பின்னர் சென்னைக்குப் போகின்ற போதெல்லாம் நான் தங்கி இருக்கிற 'வூட்லண்ட்ஸ்' ஹோட்டலுக்கு வந்து தனது வீட்டுக்கு அழைத்துச் செல்வார். இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் சபைக்கு அழைத்துச் சென்று தன்னோடு பக்கத்தில் அமர்த்துவார். பல சங்கீத வித்துவான்களுடன் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளார்.





லண்டனில் வீணை மேதை எஸ். பாலச்சந்தர், திருமதி சாந்தா பாலச்சந்தர், டொக்டர் நவரத்தினம், திருமதி தர்மி நவரத்தினம்

ராஜாராம் இராமநாதன், மதுரை சோமு, அப்போது சிறுவனாக இருந்த மண்டலின் சீனிவாசன் போன்றவர்களுடன் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார் அவர். அவருடைய சென்னை வீட்டுக்கு எத்தனையோ தடவை அவர் கூட சென்றிருக்கின்றேன். வீட்டு வாசலில் வீணை ஒன்றின் மீது எஸ். பாலச்சந்தர் என்று எழுதப்பட்டிருந்தது இப்போதும் நினைவில் இருக்கிறது.

அறையிலிருந்து வீணை வாசிப்பது அவருக்குப் பிடித்தமானது. அப்படி மெய் மறந்து அவர் வாசிக்கின்ற போது, அந்த மேதையின் விரல்கள் வீணையில் மீட்டிய இசையை கேட்டு மெய்சிலிர்த்திருக்கின்றேன். அந்த இசை என் காதுகளில் இன்னமும் ரீங்காரமிடுகிறது. அந்த மாதிரி நாதத்தை இன்றுவரை நான் கேட்டதில்லை. அப்படி ஒரு மேதையுடன் நண்பனாக இருந்ததற்கு பெருமைப்படுகின்றேன்.

சில சமயம் நான் தங்கும் ஹோட்டலுக்கு வந்து விடுவார். மெரினா கடற்கரைக்கு காரில் கூட்டிச் செல்வார். அவருடன் பேசிக்கொண்டே நடந்து செல்வதில் ஒரு சுகம். அவருடன் பேசிக் கொண்டிருப்பதை அனுபவிப்பேன். வீணை இசை போன்று அவர் பேச்சும் இருக்கும். தமிழ்ப் பட உலக ஜாம்பவான் ஏ.வி.எம். செட்டியார் வீட்டில் அவ்வப்போது செல்கின்றபோது தங்குவேன். செட்டியார் மனைவி ராஜேஸ்வரி அம்மையார் ஒரு தடவை என்னை பாலச்சந்தர் வீட்டுக்கு கூட்டிச் செல்லும்படி கேட்டார். பாலசந்தர் வீட்டுக்கு சென்றோம். ராஜேஸ்வரி அம்மையார் கண்டதும் 'டொக்டருடன் மகாலட்சுமி என்னைத் தேடி வந்து விட்டீர்களே!' என்று பாலச்சந்தர் சிரித்துக் கொண்டே வரவேற்றார். ஆனால் ராஜேஸ்வரி அம்மையாரோ 'சரஸ்வதியைத் தேடி நான் வந்திருக்கின்றேன்' என்று பதில் கூறி, பாலச்சந்தரை ஆச்சரியப்படுத்தி விட்டார். இந்த சந்திப்பை எல்லாம் எப்படி மறக்க முடியும்?

வீடுகளில் அவர் வீணை வாசிக்க மாட்டார். ஆனால் எனக்கு தெரியதக்கதாக லண்டனில் அவர் ஒரு வீட்டில் வீணை வாசித்து இருக்கிறார். எனது வீட்டில் ஒரு பெரிய வீணை கச்சேரியையே நடத்தி முடித்திருக்கிறார். நல்ல ரசிகர்களை அழைத்து இருந்தேன். ஆங்கிலேய நண்பர்கள் வந்திருந்தனர். இரண்டு மணித்தியாலங்கள் வாசித்து ரசிகர்களை எல்லாம் கட்டிப் போட்ட நிகழ்ச்சியை மறக்க முடியாது. யாழ். சீலன் வந்திருந்தார். 'பியானோ' வாசிப்பீர்களா?' என்று கேட்டார். 'ஆனந்த பைரவியில்' வாசித்துக் காட்டினார். பிரமித்துப் போய்விட்டேன்.

கவிதையில் எனக்கு ஒரு செய்தி அனுப்பினார். என்னை மிகவும் கவர்ந்தது. அக்கடிதத்தை பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். பல கர்நாடக இசை, நடன கலைஞர்களுடன் நெருக்கமாக பழகி இருக்கிறேன். ஆனால் வீணையில் உலகப் பிரசித்தி பெற்று விளங்கிய மேதை பாலச்சந்தர் என்ற மாபெரும் விற்பன்னர் நினைவுகள் ஞாபகத்தில் வந்தபடியே இருக்கின்றன.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் 'அரசறிவியல் அறிமுகம்' நூல் வெளியீடு

**இளங்கலைஞரும், ஆசிரியருமான கனகரெத்தினம் சிவதர்சனின் 'அரசறிவியல் அறிமுகம்' எனும் நூல் வெளியீடு கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய பிரதான மண்டபத்தில் ஹம்சத்வனி கலைமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.**

கலைமன்றத்தின் பொருளாளர் நா.கஜேந்தினி தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாக கல்குடா வலய கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி கலந்து கொண்டார். நூலின் அறிமுக நயவுரையை கல்குடா கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி சீ.லோகேஸ்வரி, நூல் மற்றும் நூலாசிரியரருக்கான வாழ்த்துரையை எழுத்தாளரும் ஆசிரியருமான எ.த. ஜெயரஞ்சித், சிறப்புரைகளை ஆசிரிய ஆலோசகர் த.அகிலன், கிண்ணையடி சரஸ்வதி வித்தியால முதல்வர் ந.சுரேந்திரகுமார் மற்றும் முருகன்தீவு சிவசக்தி வித்தியாலய முதல்வர் செ.சுகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆலய நிருவாக சபையினர், கிராம மட்ட அமைப்புக்களைச் சேர்ந்தோர், பெற்றோர், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.







இந்நிகழ்வானது கிராமத்தில் மக்களின் கல்வி ஆர்வத்தை பறைசாற்றுவதாய் அமைந்ததுடன், கல்குடா கல்வி வலயத்தில் அரசறிவியல் தொடர்பாக வெளியிடப்பட்ட முதலாவது நூல் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூல் உயர்தரத்தில் அரசறிவியலை ஒரு பாடமாக பயிலும் மாணாக்கர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அரசியல் ஆர்வலர்க்கும் உகந்த நூலென்பதும் குறிப்பிடத்தக்கது.

**நடேசன் குகதர்ஷன்...**

# ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸுக்கு 'Good Distribution Practices' விருது



நாட்டு மக்களுக்கு உயர் தரம் வாய்ந்த மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதில் முன்னோடியாக அமைந்திருக்கும் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், Bureau Veritas இடமிருந்து சிறந்த விநியோக செயன்முறைகளுக்கான 'Good Distribution Practices' (GDP) சான்றைப் பெற்றுள்ளது. GDP சான்றளிப்பினூடாக, உலக சுகாதார ஸ்தாபனத்தின் மருந்துப் பொருட்களின் சிறந்த விநியோக செயன்முறைகளை ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் பின்பற்றுவதை உறுதி செய்துள்ளது.

மேலும், இந்த சான்றளிப்பினூடாக, விநியோகத் தொடரில் தர முகாமைத்துவ கட்டமைப்புகள் தொடர் தன்மையாக அமைந்திருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. Bureau Veritas என்பது புகழ்பெற்ற சான்றளிப்பு அமைப்பாக அமைந்திருப்பதுடன், உலகளாவிய ரீதியில் காணப்படும் நிறுவனங்களுக்கு தமது செயற்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு ஆதரவளிக்கின்றது.

இந்த கௌரவிப்பு தொடர்பில் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் மற்றும் ஹேமாஸ் சேர்ஜிகல் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் ஜுட் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "இந்த உயர் சான்றினூடாக, எமது சகல பங்காளர்களினதும் பரந்த மற்றும் பிரத்தியேகமான தேவைகளை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வது, களஞ்சியப்படுத்துவது மற்றும் விநியோகம் செய்வது போன்றவற்றில் சர்வதேச தர நியமங்களை பின்பற்றுவதை உறுதிசெய்வதாக அமையும்.

இலங்கையின் முதல் தர மருந்துப் பொருட்கள் இறக்குமதியாளரும் விநியோகத்தரும் எனும் வகையில், எமது கொள்கைகளின் பிரகாரம் ISO 9001:2015 மற்றும் GDP சான்றுகளின் அடிப்படையில் சேவைகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதையிட்டு பெருமை கொள்கின்றோம்.

இவை சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சான்றுகளாக அமைந்திருப்பதுடன், ஒழுக்கம் மற்றும் தரம் ஆகியவற்றில் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பை தெளிவாக உறுதி செய்துள்ளது." என்றார்.

# Huawei ஸ்ரீலங்கா 'Asia Pacific Seeds for the Future 2022' ஆரம்பம்

## ICT பயிற்சிக்காக தாய்லாந்து செல்லும் பல்கலைக்கழக திறமையாளர்கள்



இலங்கையின் கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன், தாய்லாந்தில் ICT பயிற்சி பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட இளம் பல்கலைக்கழக திறமையாளர்களுடன் எதிர் காலத்திற்கான ஆசிய பசுபிக் விதைகள் 2022 (Huawei AsiaPacific Seeds for Future 2022) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, இலங்கைக்கான Country Focal Point, UNESCO Cluster Office அதிகாரி ஹிமாலி ஜினதாச, Huawei Sri Lanka CEO Tao Guangyao, பல்கலைக்கழக மாணவர்கள், Huawei மற்றும் அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

திறமையான உள்ளூர் ICT திறமையாளர்களை உருவாக்குதல், அறிவுப் பரிமாற்றத்தை மேம்படுத்துதல், தொலைத்தொடர்பு துறையில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்களிடையே புரிதலை மேலும் மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

Huawei இந்த 2022 ஆம் ஆண்டில், ASEAN அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அதிக பிராந்திய திறமையாளர்களின் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்காக, Huawei AsiaPacific Seeds for the Future 2022 எனும் CSR திட்டத்தின் நீடிக்கப்பட்ட பதிப்பை வெளியிட்டுள்ளது. இது தாய்லாந்து மற்றும் இலங்கை உள்ளிட்ட 14 நாடுகளைச் சேர்ந்த உலகத்தரம் வாய்ந்த இளங்கலை பட்டத்தை தொடரும் மாணவர்களை 8 நாட்கள் ICT பயிற்சி மற்றும் வழிகாட்டலுக்காக ஒன்றிணைக்கிறது. இது முதல் முறையாக பெங்கொக்கில் 2022 ஓகஸ்ட் 19 முதல் 28 வரை இடம்பெறவுள்ளதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களுக்கு 2022 ஓகஸ்ட் 28 முதல் செப்டெம்பர் 04 வரை சிங்கப்பூரில் இதன் இரண்டாம் பகுதியும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, "கல்வியில் திறமை மேம்பாடு என்பது இலங்கை போன்ற நாடுகள் கவனம் செலுத்த வேண்டிய மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்றாக அமைய வேண்டும்"எ ன்றார். எப்போதும் சவாலான உலகளாவிய திறமையாளர்களைக் கொண்ட சந்தைக்கு முகம் கொடுக்கும் போது அறிவு மற்றும் திறன் இடைவெளியை குறைப்பதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

Huawei Sri Lanka Tao Guangyao கருத்து வெளியிடுகையில், "நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொருளாதார செழிப்புக்கான வெற்றிக்கான முக்கிய கூறுகளில் ICT திறமையும் ஒன்றாகும். இளம் திறமையாளர்களுக்கு சமீபத்திய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதும், புதிய அறிவு மற்றும் அனுபவத்தைப் பெறுவதற்கான அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதும் முக்கியமாகுமென Huawei நம்புகிறது. எதிர்காலத்திற்கான விதைகள் திட்டத்தின் மூலம் எதிர்காலத்தை வடிவமைக்க உலகளாவிய திறமையாளர்களை ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும் என்றார்.

# Supreme Chef - Season 3 ரியலிட்டி நிகழ்ச்சி: புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து



Super Chefஐ தெரிவு செய்யும் Supreme Chef Season 3 ரியலிட்டி நிகழ்ச்சியை நடாத்துவதற்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA), தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA), மட்டக்களப்பு MIANI தொழில்நுட்ப நிறுவகம், அனுராதபுரத்தின் Don Bosco பயிற்சி நிறுவகம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLRC) ஆகிய நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் செயற்படவுள்ளன.

அதற்கான உடன்படிக்கையில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சொனால குணவர்தன, பணிப்பாளர் நாயகம் கலாநிதி பதுள்ளகே விஜேரத்ன மற்றும் S4IG குழுவின் பிரதானி டேவிட் அப்லட் ஆகியோர் அண்மையில் கைச்சாத்திட்டனர். மேற்படி நிகழ்வில் NAITA தவிசாளர் தரங்க கம்லத் VTA தவிசாளர் தரங்க பஸ்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். இந்த ரியலிட்டி நிகழ்ச்சியில் 18 35 வயதுக்கிடைப்பட்ட பயிற்சிபெறும் சமையல் கலைஞர்கள் பங்குபெறலாம். அடுத்த மூன்றுவருட காலத்துக்கு இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படவுள்ளது. NAITA, VTA ஊடக குழுக்களின் உதவியுடன் சத்துர ஜயதிலக்கவின் தலைமையிலான Creative Network நிறுவனம் இந்த நிகழ்ச்சியை தயாரித்து வழங்கவுள்ளது.

"Supreme Chef ரியலிட்டி நிகழ்ச்சி இலங்கையின் தொழில் பயிற்சித் துறையை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சியாகும்.

சில தொழில்கள் தொடர்பாக சமூகத்தில் காணப்படுகின்ற குறைத்து மதிப்பிடும் போக்கினை உடைத்தெறிந்து இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு புதிய தொழில் துறைகளின் கதவுகளை திறந்துவிட்டு நாட்டின் பொருளாதாரத்துக்கு அனுகூலங்களை பெற்றுக் கொடுப்பதற்கு இந்த நிகழ்ச்சி பெரிதும் உதவுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை" என SLRC தலைவர் சொனால குணவர்தன தெரிவித்தார்.

# உயிர்காக்கும் பொருட்களை வழங்கிய UNICEF மற்றும் Rotary International



இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமை மிகவும் மோசமாக செல்லும் நிலையில் UNICEF உடன் Rotary International கூட்டிணைந்து உயிர்காக்கும் மருந்துகள், சுத்தமான குடிநீர், கற்றல் உபகரணங்கள் மற்றும் ஏனைய முக்கிய பொருட்களை நாட்டிலுள்ள சிறுவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு வழங்கவுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் இலங்கை சமூகத்திடம் இருந்து நிதி திரட்டுவதற்காக இலங்கையின் முன்னணி பாடசாலைகளின் பழைய மாணவர்களுடன் இணைந்து Rotary International இன் உலகளாவிய வலையமைப்பை பயன்படுத்தவுள்ளது.

மேலும் நலன்விரும்பிகளும் www. lifelinesrilanka.rotary.unicef.org.au எனும் ஒன்லைன் தளத்தின் மூலம் இந்த நெருக்கடி நிலைமையில் இலங்கையர்களுக்கு உதவிட முடியும். UNICEF ஆனது அவ்வாறு சேர்க்கப்பட்ட பணத்தினைக் கொண்டு நாடு முழுவதும் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்ளும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஆதரவாக அத்தியவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், நீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் மற்றும் பாடசாலை கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்திட பயன்படுத்தவுள்ளது.

இந்த கூட்டிணைவானது இன்று கொழும்பில் UNICEF தெற்காசிய பிராந்தியத்தின் பணிப்பாளர்,. ஜோர்ஜ் லாரியாஅஜய் மற்றும் UNICEF Sri Lanka வின் பிரதிநிதியான கிறிஸ்டியன் கூக் சகிதம் Rotary International இன் வலய பணிப்பாளரான ஏ.எஸ். வெங்கடேஷ் மற்றும் Sri Lanka Rotary யின் மாவட்ட ஆளுனர் புபுது டி சொய்சா ஆகியோரால் அறிமுகப்படுத்திவைக்கப்பட்டது.

## நாட்டை கட்டியெழுப்ப அனைவரும்...

நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரையும் ஒன்றிணைக்கும் வகையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும், மற்றும் வகிக்காத அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி,பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட பல அரசியல் கட்சித் தலைவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழாவில் கலந்துகொண்டனர்.

ஈ.பி.டி.பி தலைவரும், மீன்பிடி நீரியல் வள அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், தேசிய முஸ்லிம் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த குமார், தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த விழாவில் பங்கேற்றிருந்தனர். ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு அமைச்சுப் பதவிகளை வகிக்கும் காணி, சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழாவில் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுகததாச விளையாட்டரங்கிற்கு வருகைதந்திருந்த அனைத்து இன மக்களாலும் அரங்கம் நிறைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் வருகையுடன் ஆண்டு நிறைவு விழா ஆரம்பிக்கப்பட்டதுடன், கட்சியின் ஆரம்ப கர்த்தா, தேசபிதா டி.எஸ்.சேனாநாயக்க மற்றும் ஏனைய தலைவர்களின் உருவச்சிலைகளுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபகர் டி.எஸ்.சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மலர் மாலை அணிவித்தார்.

## மருத்துவ ஆலோசனைகளின்றி...

டெங்கு, கொரோனா, இன்புளுவன்சா மற்றும் பல்வேறு வைரஸ் காய்ச்சல்கள் தற்போது பரவி வருவதால், அவற்றை சரியாக கண்டறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

எனவே மருத்துவ பரிந்துரைகள் இன்றி சிகிச்சை எடுப்பது மிகவும் ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மழையுடன் கூடிய காலநிலையுடன், டெங்கு, கொவிட் மற்றும் இன்புளுவன்சா நோய்களின் பரவல் அதிகரிக்கக்கூடும்.

எனவே மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஐந்து இலட்சத்தை கடந்த...

பயணிகள் வந்துள்ளனர். மேலும், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்தும் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளும் அக்காலப்பகுதியில் இந்நாட்டுக்கு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## எந்தவொரு நிலையத்திலும்...

எரிபொருளை பெற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மீற்றர் மற்றும் விலைக் கட்டணங்களை வெளிப்படுத்தும் வாடகை சேவை முச்சக்கர வண்டிகளுக்கு 5 லீற்றர் எரிபொருளின் ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரிசி ஏற்றிச் சென்ற லொறி...

பகுதிகளில் உள்ள மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு லொறி சென்று கொண்டிருந்த இந்த கனரக வாகனம் செங்குத்தான பகுதியில் பிரதான வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக கட்டுப்பாட்டையிழந்த கனரக வாகனம் வீடொன்றுக்கு அருகில் விபத்துக்குள்ளானதால் வீட்டுக்கும் பலத்த சேதமேற்பட்டுள்ளது. இருப்பினும் வீட்டினுள் யாரும் இருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அனர்த்தங்களை சமாளிக்க...

பணிப்புரையின் பேரில் நேரடியாக உத்தரவு பிறப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி, மாவட்டச் செயலகங்களின் தலைமையில், மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்புப் பிரிவுகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்கும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன செயற்படவுள்ளது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் உள்ள நிவாரண சேவை அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வழங்கும்.

அனர்த்தங்கள் ஏற்படுவதைத் தவிர்த்து, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மற்றும் அவசரகால பேரிடர் சூழ்நிலை ஏற்பட்டால், அதற்காக எடுக்க வேண்டிய துரிதமான நடவடிக்கைகள் குறித்தும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அப்பணிகளின் செயல்திறனை உயர் மட்டத்தில் பேணி, தேவையான நிவாரணத் திட்டத்தை அவசரமாக நடைமுறைப்படுத்துவதற்கான தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் அனைத்து துறைசார் அமைச்சுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரநிலை தொடர்பில் முறையிடுவதற்கு 117 என்ற தொலைபேசி எண், 24 மணிநேரமும் செயல்படுத்தப்படுகிறது. அனர்த்த நிவாரண சேவை நிலையத்தை (NDRSC) 24 மணிநேரமும் செயற்படுத்த அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் பிற வசதிகள் இதன் மூலம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## டொலர் பிரச்சினை தீரும் வரை...

பாராளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 22/7 ன் கீழ் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்துடனான சந்தித்திப்பின் போது அவர்கள் வாராந்தம் 30 லீற்றர் எரிபொருளை தமக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

அது தொடர்பில் ஆராய்வதாக நாம் அவர்களுக்கு குறிப்பிட்ட போதும் அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அவர்களுடன் அதனைத் தவிர வேறு எந்த இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை.

எரிபொருள் இறக்குமதிக்கான டொலர் கையிருப்பு குறைவடைந்துள்ளமையே எரிபொருள் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கு காரணம்.

இதனால் பொது போக்குவரத்து மற்றும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றுக்குத்தேவையான எரிபொருளை விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களுக்கு எரிபொருள் ஒதுக்கீட்டு முறைமையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எவ்வாறெனினும் அந்நிய செலாவணி பிரச்சினை குறைவடையும் வரை தற்போது நடைமுறையிலுள்ள முறைமையின் கீழேயே எரிபொருள் விநியோகம் நடைபெறும்.

இதற்கான மாற்று வழிகளை குறுகிய காலத்தில் முன்னெடுப்பதில் நெருக்கடிகள் காணப்படுகின்றன.

தற்போது வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவு போதுமானது அல்ல என்பதனை உணர்ந்துள்ளோம்.எனினும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்க முடிகின்றது. நெருக்கடிகள் குறைவடையும் பட்சத்தில் எரிபொருள் விநியோகத்தில் மாற்றங்களை மேற்கொண்டு விநியோக அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு - கிழக்கு மக்களுக்கென...

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஜித் குணரட்ன நாரகல தலைமையில் லொத்தர் சபையின் தலைமையகத்தில் வைத்து அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இந்த அதிஷ்ட இலாபச் சீட்டின் பெறுமதி ரூபா 50.00 ஆகும்.

நேற்று முதல் சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ள இந்த அதிஷ்ட இலாபச் சீட்டு அடுத்துவரும் இரு மாதங்களுக்கு சந்தையில் விற்பனை செய்யப்பட உள்ளதோடு சீட்டிலுப்பு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக இடம்பெறும் என்று அபிவிருத்தி லொத்தர் சபையின் பொது முகாமையாளர் அனுர ஜயரட்ன தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய பொதுமுகாமையாளர், இந்த அதிஷ்ட இலாபச் சீட்டில் மூன்று இலக்கங்களுடன் ராசி அடையாளம் பொருந்துமாயின் இருபது இலட்சம் பணப்பரிசும், மூன்று இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசுகளும், இரண்டு இலக்கங்கள் பொருந்துமாயின் ஐநூறு ரூபா பணப் பரிசும் யாதாயினும் ஒரு இலக்கம் அல்லது ராசி அடையாளம் பொருந்துமாயின் ஐம்பது ரூபா பணப்பரிசில்கள் பலவற்றையும் வெற்றி பெற முடியும் என்று குறிப்பிட்டார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் இவ்வைபவத்தில் உரையாற்றிய போது, வடக்கு கிழக்கு மக்களுக்காக அவர்களது மொழியிலேயே முதன் முறையாக அதிஷ்ட இலாப சீட்டொன்றை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை அடைகின்றோம்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிகளை விஸ்தரிப்பது தொடர்பில் மாவட்ட மட்ட விற்பனை முகவர்களுடன் நடாத்திய சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடல்களின் பிரதிபலனாகவே இவ்வாறான அதிஷ்ட இலாப சீட்டொன்றை நாட்டுக்கு அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்து இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

கொழும்பு, முகத்துவாரம் விஷ்ணு ஆலய குரு சிவஸ்ரீ ராஜா சுவாமி குருக்கல் அவர்களின் சமய ஆசீர்வாத நிகழ்வுகளுடன் ஆரம்பமான இந்த அதிஷ்ட சீட்டு அறிமுக வைபவத்தில் இச்சீட்டின் முதல் தொகுதி மட்டக்களப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த மட்டக்களப்பு விற்பனை முகவர் ஜி. உதயகுமாருக்கு லொத்தர் சபையின் தலைவரினால் வழங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏனைய விற்பனை முகவர்களுக்கும் இந்த அதிஷ்ட இலாப சீட்டு தொகுதிகள் சந்தைப்படுத்தவென வழங்கப்பட்டதோடு ராசி அதிஷ்ட இலாப சீட்டிலுப்பில் வெற்றியீட்டியவர்களுக்கும் இவ்வைபவத்தின் போது பணப்பரிசில்களுக்கான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

## 22 வது திருத்த சட்டமூலத்திலுள்ள...

அபேவர்தன தலைமையில் கூடியது. சபையில் சபாநாயகர் அறிவிப்பின்போது 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சட்டமூலமானது அரசியலமைப்பின் பிரிவு 82(1) இன் விதிகளுக்கு இணங்குகிறது. எனினும் அரசியலமைப்பின் 82 (5) ல் குறிப்பிடப்பட்டுள்ள விசேட பெரும்பான்மையால் (பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு) நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சட்டமூலத்தின் பிரிவு 2, அரசியலமைப்பின் 4(பி) உடன் இணைக்கப்பட்ட பிரிவு 3 க்கு முரணான விதிகளைக் கொண்டுள்ளது, அத்துடன் இது பிரிவு 82(5) இன் விசேட பெரும்பான்மையால் மட்டுமே இயற்றப்படலாம் என்பதுடன் பொதுவாக்கெடுப்பில் மக்களால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதை பிரிவு 83 உறுதிப்படுத்துகின்றது.

எனினும், உப பிரிவு 2ல் உள்ள முன்மொழியப்பட்ட பிரிவுகள் 41ஏ (6), 41பி (4) ஆகியவை அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதியை நீக்குவதற்குத் தகுந்தவாறு திருத்தப்பட்டால், பொதுவாக்கெடுப்பு அவசியமற்றதாகும்.

எவ்வாறாயினும், (அ) முன்மொழியப்பட்ட பிரிவு 44(2), விதி 44(3), சரத்து 45(1), 46(1), 47(3)(அ) சரத்து 3 இல் உள்ள 48(3) மற்றும் 50 ஆகியவை ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் செயல்படும் குறிப்பை நீக்குவதன் மூலம் பொருத்தமான முறையில் திருத்தப்பட்டால் பொதுவாக்கெடுப்பின் அவசியம் ஏற்படாது.

(ஆ) சரத்து 3 இல் உள்ள உத்தேச உறுப்பு 47(2) இல் 47(2)(A) இன் விதிகள் உறுதிப்படுத்தப்பட்டால் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானங்கள் பாராளுமன்ற ஒழுங்கு முறைமைகளில் அச்சிடப்பட வேண்டும் என்றார். அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் 9 மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 22 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என உத்தரவிடுமாறு கோரியே மேற்படி மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு,கலாநிதி குணதாச அமர சேகர உள்ளிட்ட ஒன்பது பேரே நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவில் பிரதிவாதியாக சட்டமாஅதிபர் பெயரிடப்பட்டிருந்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, முன்வைக்கப்பட்டகருத்துக்களை பரிசீலித்ததன் பின்னர், மனுக்களின் விசாரணையை நிறைவு செய்த நீதிபதிகள் குழு, அதன் வியாக்கியானத்தை ஆகஸ்ட் 23 ஆம் திகதி சபாநாயகருக்கு அனுப்பியிருந்த நிலையிலேயே உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் நேற்று சபைக்கு அறிவித்தார்.

## கச்சதீவு ஒப்பந்தத்தை...

சொந்தமாக இருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு சமஸ்தான முறை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. சமஸ்தானத்துக்கு சொந்தமான நிலப்பகுதியை மத்திய அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. மீன் வலைகளை உலர்த்தவும், சமையல் செய்யவும் கச்சதீவை தமிழக மீனவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

இதுபோன்ற சூழலில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே 1974ம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் அடிப்படையில், கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது. ஒப்பந்தத்தில் கையெழுத்திட இரு நாட்டு பிரதமர்களுக்கும் அதிகாரம் இல்லை. நாடாளுமன்ற மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் பெறாததால் இது செல்லுபடியாகாது. எனவே கச்சத்தீவை மீண்டும் நமது மத்திய அரசிடமே ஒப்படைக்க வேண்டும்.

கச்சதீவை ஒட்டியுள்ள பகுதிகளில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்த காலம் தற்போது மாறிவிட்டது. கச்சத்தீவை இலங்கை கப்பற்படை முழு கட்டுப்பாட்டில் வைத்து, இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் சுமார் 1,500 மீனவர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இதுபோன்ற சூழலில் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினரிடம் இருந்து பாதுகாக்க கோரி தமிழக சட்டமன்றத்தில் கடந்த 2013, மே 3ந் தேதி தீர்மானம் இயற்றப்பட்டது. இந்த தீர்மானம் தொடர்பாக மத்திய அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, 1974ம் ஆண்டு கையெழுத்தான கச்சத்தீவு ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்ய கோரி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

நிலுவை மனுக்களோடு இணைக்க உத்தரவு இந்த மனுவை நீதிபதி ஹெமந்த் குப்தா தலைமையிலான அமர்வு விசாரித்தது. அப்போது மனுதாரர் சார்பில் வக்கீல் சி.ஆர்.ஜெயசுகின் ஆஜராகி, 'ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படுகின்றனர்' என வாதிட்டார்.

அப்போது நீதிபதிகள், 'இதே விவகாரம் தொடர்பாக ஜெயலலிதா தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளதே, அதை விசாரித்து தீர்ப்பு அளித்தால் போதாதா?' என வினவினர்.

இதற்கு வக்கீல் ஜெயசுகின், 'இந்த மனுவையும் ஏற்கனவே நிலுவையில் உள்ள மனுக்களுடன் இணைத்து விசாரிக்க வேண்டும்' என கோரிக்கை விடுத்தார். இதை ஏற்ற இந்திய உச்ச நீதிமன்றம், இந்த மனுவை ஏற்கனவே நிலுவையில்

## போதுமான மா வழங்க இணக்கம்;...

அளவு கோதுமை மாவை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

சந்தையில் கோதுமை மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக கோதுமை மாவின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டது.அதன் காரணமாகவே ஒரு இறாத்தல் பாணின் விலை அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்திருந்தது. எனினும் இரண்டு பெரிய நிறுவனங்களும் போதுமான அளவு கோதுமை மாவை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதை அடுத்து பாணின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றார்.

## நஷ்டத்தில் இயங்கும்...

ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் மறுசீரமைத்தல் தொடர்பான வழிகாட்டுதலை வழங்க நிதியமைச்சின் கீழ் இந்தப் பிரிவு நிறுவப்படவுள்ளது.

## விரைந்து செயற்படுத்த...

மற்றும் அரச நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படையில் செயற்படுத்தப்படுகிறதா? என்பது தொடர்பில் இந்த குழு ஆராயவுள்ளது.

அத்துடன் குறித்த திட்டங்களுக்கான வசதிகளை அமைச்சுக்களின் ஊடாக வழங்க கூடியதாக உள்ளதா? மற்றும் மதிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கு மேலதிகமாக பணியாளர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனரா? என்பன தொடர்பில் குறித்த குழு ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## சட்டவிரோதமாக கனடா செல்ல...

காணாமல் போயிருந்த இருவர் உட்பட 11 பேரை கைது செய்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் ஏனைய ஒன்பது பேரும், தமிழகத்தின் ராமநாதபுரத்தில் உள்ள ஏதிலிகள் மறுவாழ்வு மையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள் என தெரிய வந்துள்ளது. தலா 2.5 லட்சம் ரூபாவை கொழும்பில் உள்ள முகவர் ஒருவரிடம் வழங்கி, இந்தியாவின் தெற்கு கடற்கரையில் இருந்து படகு மூலம் கனடாவுக்குப் பயணம் செய்வதை உறுதி செய்ததாக அவர்கள் காவல்துறையினரிடம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், அவர்களுக்கு உதவியாக இருந்த இந்தியர்களை தேடி கியூ பிரிவினர் தமிழகத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஆறுகளின் நீர் மட்டம்...

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்துள்ளதுடன், களனி கங்கை, களு கங்கை, நில்வளா கங்கை, மஹா ஓயா மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றின் பல அளவீடு நிலையங்களில் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் சிறியளவில் வெள்ளம் ஏற்படக்கூடும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

இதனால் களனி கங்கையின் நீர் மட்டம், நாகலகம் வீதி, ஹங்வெல்ல மற்றும் க்ளென்கோர்ஸ் பகுதியில் அதிகரித்துள்ளதால் சிறிதளவு வெள்ள நிலைமையாக மாறி வருதோடு, களு கங்கையின் நீர்மட்டம் மகுர, மில்லகந்த பகுதிகளில் அதிகரித்து வருவதால் சிறிய வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

நில்வளா கங்கையின் நீர் மட்டம் பாணடுகம அளவீட்டு நிலையத்தில் அதிகளவில் பதிவாகியுள்ளதால் அப்பகுதியில் சிறியளவு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே படல்கம, கிரியுல்ல ஆகிய பகுதிகளில் மஹா ஓயாவின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதுடன், அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் தூனமலே பகுதியில் அதிகரித்து காணப்படுவதுடன் சிறிய வெள்ளம் குறித்து எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## மலையக மக்களுக்கான... 03ஆம் பக்கத் தொடர்

விட குறைவான தொகையே அவர்களுக்கு சம்பளமாக கிடைக்கின்றது.

சமுர்த்தி உதவி கொடுப்பனவு, அரசாங்கத்தின் விஷேட நிவாரணங்கள் என எதுவும் அவர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்கள் நிரந்தர வேலை செய்வதாக அதற்கான காரணம் கூறப்படுகிறது. இந்த நிலையில் கடுமையான உழைப்பாளர்களான அவர்களுக்கு அநீதியே இழைக்கப்படுகிறது.

கோதுமை மா ஒரு கிலோ 360 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் ஒரு லீட்டர் 350 ரூபாவாகவும் விற்கும் போது அவர்கள் ஒருவேளை உணவையாவது எவ்வாறு உண்ண முடியும் என்பதை சிந்திக்க வேண்டும்.

பெருந்தோட்ட நிலைமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் சிறந்த அனுபவம் கொண்டவர். அதனை கருத்திற் கொண்டு அந்த மக்களுக்கு விசேட நிவாரண திட்டங்களை நடைமுறைப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மந்தபோசனம் தொடர்பில் சபையில் பேசப்படும் நிலையில் மலையக மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டில் போசாக்கின்மையால்... 03ஆம் பக்கத் தொடர்

அங்கு பாரம்பரியமாக கடற்தொழில் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் கடலட்டைப்பண்ணைகளாக மாறியுள்ளன. இதனால் கடலுணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரியாலைப்பகுதியில் சீனாவின் ஒரு நிறுவனம் கடலட்டை குஞ்சுகளை உருவாக்க செயற்பாடுகளை மேற்கொண்டு அது தோல்வியில் முடிந்துள்ளது. இப்போது அவர்கள் எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு போன்ற பகுதிகளில் கடலட்டை குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக காணிகளை கோருகின்றார்கள். பல நீரோட்டம் இல்லாத நிலங்கள் தனியாரின் பெயர்களில் சீனாவுக்கு வழங்கப்படுகின்றன.

சீனாவின் செயற்பாடுகள் வடக்கில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் அதிகமாக மக்களைப் பாதிக்கின்றது.

கடந்த 3 மாதங்களுக்குள் வடக்கு மாகாணத்தில் சுமார் 1000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் கடலட்டை வளர்ப்பதற்காக வழங்கப்பட்டுள்ளன. இதன்பின்புலத்தில் சீனா உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய ரோட்டரி கழக... 03ஆம் பக்கத் தொடர்

இன்று சமூக பொருளாதார நிலைகளில் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் சார்ந்த பல்வேறு நலன்புரி திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதே பிரதான நோக்கம் எனவும் நகர்ப்புற மற்றும் கிராமிய மட்டத்தில் மக்கள் நலன்சார்ந்த வளர்ச்சி பணிகளில் பாரபட்சமின்றி கவனம் செலுத்துவதே தமது குழுவினரதும் எதிர்பார்ப்பு என ஷிரோமி கோவிந்தராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா அன்பளிப்பாக... 03ஆம் பக்கத் தொடர்

நவீனப்படுத்தப்பட்டதன் பின்னர் கொழும்பு துறைமுகத்தை நோக்கி கடந்த 03ஆம் திகதி தனது பயணத்தை ஆரம்பித்துள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இந்தக்கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

## எதிர்க்கட்சி 2ஆம் வகுப்பு... 03ஆம் பக்கத் தொடர்

தெரிவித்தார். மந்தபோசனம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அதனை எதிர்க்கட்சி அரசியல் நோக்கத்தில் பார்க்காமல் அதற்காக என்ன செய்யலாம் என்பது தொடர்பிலேயே யோசனை முன் வைக்க வேண்டும்.

உணவு பாதுகாப்பு தொடர்பான உலகளாவிய கணிப்பீட்டில் 113 நாடுகளில் 77 வது இடத்தில் இலங்கை உள்ளது.

கொரோனா வைரஸ் சூழ்நிலை, உக்ரேன் யுத்தம், கடந்த அரசாங்கங்கள் விட்ட தவறுகள் என பலவற்றை இதற்கு காரணமாக கூற முடியும்.

மந்த போசனத்தில் பெரிதும் பாதிக்கப்படும் பிரதேசமாக நுவரெலியா மாவட்டத்தையும் யாழ்ப்பாணம் மாவட்டத்தையும் குறிப்பிட முடியும். அரசாங்கம் அது தொடர்பில் விசேட திட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் மந்தபோசனம் தொடர்பில் 50 பில்லியன் நிதி ஒதுக்கீட்டில் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அத்துடன் உலக வங்கி 180 மில்லியனையும் ஆசிய அபிவிருத்தி வங்கி 140 மில்லியனையும் அதற்காக வழங்கியுள்ளது. சீன அரசாங்கம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக ஒரு தொகை அரிசியை வழங்கியுள்ளது. அந்த வகையில் மந்த போசனம் தொடர்பில் தற்போதுள்ள நிலையில் இருந்து மீள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறெனினும் மந்தபோசனத்தில் இலங்கை ஆறாவது இடத்திற்கு வந்தமைக்கு கடந்த கால அரசாங்கங்களும் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவில் இருந்து காய்கறிகளை இறக்குமதி செய்யுமாறு பாக். வர்த்தக சபை கோரிக்கை



பாகிஸ்தானின் கடுமையான பொருளாதார நெருக்கடி சமீபத்தி வரலாறு காணா வெள்ள அனர்த்தத்தின் காரணமாக மேலும் மோசமடைந்திருப்பதையடுத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் உச்சமடைந்துள்ளன. பல உணவு வகைகள் சந்தையில் கிடைப்பதாக இல்லை என ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில் இப் பொருட்கள் இந்தியாவில் மலிவாகக் கிடைப்பதால் இந்திய – பாக். எல்லை வழியாக பாகிஸ்தானுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என லாகூர் வர்த்தக சபை அரசுக்கு கோரிக்கை விடுத்திருப்பதோடு நிதி மற்றும் வருவாய்த்துறைக்கான பாக். மத்திய அமைச்சர் மிப்டா இஸ்மாயில், வெள்ள அனர்த்தம் உணவுப் பொருள் உற்பத்தியை பெருமளவில் பாதிப்படையச் செய்திருப்பதால் உணவு விநியோக நிலையை உடனடியாக சீர் செய்யும் வகையில் காய்கறிகள், சமையல் எண்ணெய் மற்றும் அவசியமான நுகர்வு பொருட்களை இந்தியாவில் இருந்து வரவழைப்பது குறித்து பாக். அரசு கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி, இந்தியாவுடனான வர்த்தக உறவை மீளவும் ஆரம்பிப்பது பற்றி அரசு இன்றும் தீர்மானிக்கவில்லை என்று கூறியுள்ளார். பாக். மக்களின் அவசிய காய்கறிகளான வெங்காயம் கிலோ 450 ரூபாவாகவும் தக்காளி கிலோ 350 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதோடு அவை இந்தியாவில் கிலோ 40 மற்றும் 20 ரூபாவுக்கு கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை சமாதான நீதவான்



பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த மாணிக்க வியாபாரி அஹமட் ஸித்னி மர்ஸூக் அகில இலங்கை சமாதான நீதவானாக களுத்துறை மாவட்ட மேலதிக நீதவான் சம்பத் கமகே முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவருக்கான நியமனக்கடிதத்தை பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் (06) வைபவரீதியாக வழங்கி வைத்தார்.

சீனன்கோட்டை பிரதேச சமூக சேவையாளரான இவர், தர்கா நகர் ஸாஹிராக்கல்லூரி, கம்பளை ஸாஹிராக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் சீனன்கோட்டை பிரபல்யமிக்க மூன் விளையாட்டுக்கழகத்தின் சிரேஷ்ட விளையாட்டு வீரருமாவார். மேலும் பிரதேசத்திலுள்ள பல்வேறு பொதுநல அமைப்புகளில் தன்னை இணைத்துக்கொண்டு பல்வேறு சமூக பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அன்னார், சீனன்கோட்டையைச் சேர்ந்த மர்ஹூம்களான அப்துல் மர்ஸூக், சித்தி ஹபீழா யூசுப் தம்பதிகளின் புதல்வராவார்.

# காஷ்மீரில் பிரபலமாகும் எலும்பிலான கலைப்படைப்புகள்

காஷ்மீரின் சிறப்பாகக் கருதப்படும் கைத்தறி, சேலை நெய்தல், தரைவிரிப்பு தயாரிப்பு போல மிருக எலும்புகளால் உருவாக்கப்படும் கலைநயம் மிக்க பொருட்களும் தற்போது பிரசித்தி பெற்று வருவதாக காஷ்மீர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அஸீஸ் உல் ரெஹ்மான் என்ற 22 வயது காஷ்மீர் இளைஞர் அற்புதமான கலைப்படைப்புகளை மிருக எலும்புகளில் இருந்து உருவாக்குவதாக அவை உதாரணம் காட்டுகின்றன. எலும்புகளின் மீது வண்ண பூச்சுகளை மேற்கொள்வதன் மூலம் இக் கலைப்படைப்புகள் உருவாக்கப்படுவதாகவும் பல்வேறு பொருட்கள் உருவாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

**நகர அபிவிருத்தி அதிகார சபை**

**முதலீட்டு முன்மொழிவுகளுக்கான அழைப்பு (RFP)**

**நுவரெலியா பழைய சீ பேங்க் ரெஸ்ட் (Cey Bank Rest) வடிவமைத்தல் - மறுசீரமைத்தல் - நிர்மாணித்தல் - நிதியிடல் - செயற்படுத்துதல் - ஒப்படைத்தல் அடிப்படையில் (DRBFOT) முதலீட்டு முன்மொழிவுகளைக் கோருதல் - (RFP)**

**முதலீட்டு முன்மொழிவுகளைக் கோரும் ஆவணங்கள் வழங்கும் மற்றும் சமர்ப்பிக்கும் காலத்தை நீடித்தல்**

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அதிகார சபைக்குரித்தான பழைய சீ பேங்க் ரெஸ்ட் (Cey Bank Rest) வடிவமைத்தல் - மறுசீரமைத்தல் - நிர்மாணித்தல் - நிதியிடல் - செயற்படுத்துதல் - ஒப்படைத்தல் (RFP) என்பவற்றுக்காக 2022-07-31ஆம் திகதிய ''தினகரன் வாரமஞ்சரி'' பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. அதன் பிரகாரம் ஆவணங்கள் வழங்கும் மற்றும் சமர்ப்பிக்கும் திகதிகள் பின்வரும் வகையில் நீடிக்கப்பட்டுள்ளன. குறித்த விளம்பரத்தின் ஏனைய தகவல்கள் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

**ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள்** - 2022 செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை

**முதலீட்டு முன்மொழிவுகளை ஒப்படைக்கும் இறுதி நாள்** - 2022 செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு

**தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணக்கக் குழு,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,**
**'சுஹுருபாய', பத்தரமுல்ல.**



பெருந்தோட்ட அமைச்சு

**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

**சங்ஸ்தா தேயிலை பொதியிடுவதற்காக அச்சு வேலைகளைச் செய்துகொள்ளல் மற்றும் அதனோடிணைந்த சேவைகளை பெற்றுக்கொள்ளல்**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சங்ஸ்தா தேயிலையை விற்பனை செய்யும் பொருட்டு தேவையான உலோக முலாமிடப்பட்ட உறைகள், மயிசா தேயிலை டெக், அட்டைப் பெட்டிகளை வழங்கப்பெறுதல் மற்றும் மயிசா தேயிலை உறை பொதியிடுவதற்கான பெறுகைச் செயற்பாடுகளின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அச்சிடப்பட வேண்டிய உறைகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது பின்வரும் 01, 02, 03 மற்றும் 04ஆம் இலக்கத்தின் கீழுள்ள பொருட்களுக்கு வெவ்வேறான வகையில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**01. கேள்வி இல. SLSPC/HO/SANSTHA TEA MATERIALS/T-150(RE)/2022**
அச்சிடப்பட்ட உலோக முலாமிடப்பட்ட உறைகள் (**Metalized Pouches**)
மாதிரிகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம்./Continues Rollஆக இருத்தல் வேண்டும். 12PET+12METPET+40LLDPE

| ITEMS | பொதியின் அளவு | தேவையான அளவு |
|---|---|---|
| 50 g | 14cm X 10cm | 200000 |

மேற்குறிப்பிடப்பட்ட அளவுகளில் ஒரு வருடத்தினுள் நான்கு சந்தர்ப்பங்களில் வழங்குதல் வேண்டும்.

**02. கேள்வி இல. SLSPC/HO/SANSTHA TEA MATERIALS/T-162/2022**
தேயிலை உறைகளுக்கு மயிசா தேயிலை (**Miza Tea Tags**) அச்சிட்டு வழங்குதல்
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தேயிலை இலச்சினை சகிதம் அச்சிடல் வேண்டும்.

| ITEMS | பொதியின் அளவு | தேவையான அளவு |
|---|---|---|
| Miza Tea Tags | - | 800000 |

மேற்குறிப்பிடப்பட்ட அளவுகளில் ஒரு வருடத்தினுள் 02 சந்தர்ப்பங்களில் வழங்குதல் வேண்டும்.

**03. கேள்வி இல. SLSPC/HO/SANSTHA TEA MATERIALS/T-163/2022**
அச்சிடப்பட்ட அட்டைப் பெட்டிகள் வழங்குதல் (**Cardboard Box**)
(04 Ply மற்றும் 05 Ply அளவுகளில் இரண்டுக்கும் வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரிகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம்)

| ITEMS | பொதியின் அளவு | தேவையான அளவு |
|---|---|---|
| Cardboard Box | 23''x12''x10 | 1000 |
| Cardboard Box | 16''x16''x13 | 1000 |
| Cardboard Box | 19''x19''x12 | 1000 |
| Cardboard Box | 25''x16''x12 | 1000 |
| Cardboard Box | 25''x10''x12 | 250 |

மேற்குறிப்பிடப்பட்ட அளவுகளில் ஒரு வருடத்தினுள் 02 சந்தர்ப்பங்களில் வழங்குதல் வேண்டும்.

**04. கேள்வி இல. SLSPC/HO/SANSTHA TEA MATERIALS/T-164/2022**
மயிசா தேயிலை உறைகள் (**Miza Tea Bags**) பொதியிடல் (**Packing**)
மயிசா தேயிலை பைகள் (Miza Tea Bags) 800000 மூன்று அளவுகளில் (25, 50, 100) பொதியிடுவதற்காக (Packing) தேயிலை, Tea Tag, அச்சிடப்பட்ட அட்டைப் பெட்டிகள் எமது நிறுவனத்தினால் வழங்கப்படும். செலோபென் மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் நிறுவனத்தினால் வழங்கப்பெறுதல் வேண்டும்.

**பொதுவான விடயங்கள்**

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0115882494/ 0115921464 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக எமது நிறுவனத்தின் விற்பனைப் பிரிவில் விசாரித்தறியலாம்.

அச்சு வேலைகளுக்குத் தேவையான பிளேட் (Plate) மற்றும் ஆர்ட் வேர்க் (Art Work) என்பவற்றுக்கு செலவாகும் தொகையை வெவ்வேறான வகையில் விலைமனுவில் குறிப்பிடுதல் வேண்டும்.

குறித்த வேலை நிறைவடைந்ததன் பின்னர் அந்தப் பொருட்களை இல. 257, ஸ்ரீதம்ம மாவத்தை, கொழும்பு-10 எனும் இடத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். இதற்குச் செலவாகும் போக்குவரத்துச் செலவு இருந்தால் அதை விலைமனுவில் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி வைப்பாக ஒரு இலட்சம் ரூபாவை (ரூபா 100,000.00) தொகையை எமது நிறுவனத்திற்குச் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விலைமனுப் படிவத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.

வெற்றிகரமான கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டதன் பின் கேள்வியின் முழுப் பெறுமதியின் 10% பெறுமதியான ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகக் கூடிய வேலைக் காப்பு வங்கிப் பிணை முறியொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் எமது நிறுவனத்தின் பிரச்சினை அற்ற காரணத்தினால் வழங்கல் நிறுத்தப்பட்டால் வேலை காப்பு வங்கிப் பிணை முறி மூலம் எமது நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட்டுக்கொள்ள வேண்டும்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, பீச்சீ வளவு, மீரானியா வீதி, கொழும்பு – 12 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-09-28ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். அல்லாவிடில் தலைவர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, பீச்சீ வளவு, மீரானியா வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு 2022-09-28ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

2022-09-28ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு இந்தக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ள நீங்கள் கலந்துகொள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத மற்றும் முழுமையற்ற விலைமனுக்கள் தொடர்பில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் பொறுப்புக் கூறாது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, பீச்சீ வளவு, மீரானியா வீதி, கொழும்பு 12.**
**தொலைபேசி இல. 011 5921465/ 0115921463**


# உய்கர் முஸ்லிம்களுக்கு எதிரான சீன நடவடிக்கைகளை விவரிக்கும் ஐ.நா. அறிக்கை வெளியீடு சீனா கடும் கண்டனம்

சீனாவின் ஸின் ஜியாங் மாநிலத்து உய்கர் முஸ்லிம் சிறுபான்மையினர் மீது சீன அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் கடுமையான அடக்குமுறைகளை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த மாதம் 31ம் திகதி ஐ.நா. அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. உய்கர் முஸ்லிம்கள் பலவந்தமாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் சித்திரவதை, படுமோசமாக நடத்தப்படுவது, பலவந்தமாக மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவது, மோசமான சூழ்நிலைகளுடனான தடுத்து வைப்பு ஆகியனவற்றை இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையை நிராகரித்துள்ள ஐ.நா. சபையின் சீனப்பிரதிநிதி, தறவான தகவல்களை, சீன எதிர்ப்பு சக்திகளின் புனையப்பட்ட பொய்கள், சீனாவின் சட்டம் மற்றும் கொள்கைகளை திரித்து கூறும் முயற்சிகள் என்பனவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை என இதை வர்ணித்துள்ளார்.

இந்த அறிக்கை 2018ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கடந்த வருடமே முழுமையடைந்தது. இது வெளியிடப்படுவதைத் தடுக்கும் வகையில் சீனா பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் ஐ.நா உறுப்பு நாடுகளின் முயற்சியால் கடந்த மாதம் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது.

எனினும் இந்த அறிக்கை 'இன அழிப்பு' என்ற பதத்தை பயன்படுத்தவில்லை என்பதும் சந்தேகத்திற்குரிய மரணங்கள் இம்முகாம்களில் நடைபெறுகின்றன என்பதை அடிக்குறிப்பாக குறிப்பிடப்பட்டிருப்பதும் உய்கர் சார்பு அமைப்புகளுக்கு இந்த அறிக்கை திருப்தி தருவதாக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.


**பெயர் மாற்றம்**

தியத்தலாவ வரக்காப்பொல எனும் இடத்தில் பிறப்பிடமாகவும் இல.1152/10 முள்ளிப்பொத்தானை எனும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட ரவிச்சந்திரன் வுகனேந்திரகுமார் (199306503489) ஆகிய நானும் எனது மகளான வுகனேந்திரகுமார் ரக்சிதா ராகவியும் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு எமது பெயர்களை ரவிச்சந்திரன் முகம்மட் ஆஸீக் எனவும் முகம்மட் ஆஸீக் பாத்திமா அப்னா எனவும் மாற்றம் செய்துள்ளோம் என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**R.முகம்மட் ஆஸீக்**



**தேசிய போட்டி விலைமனுக்களுக்கான அழைப்பு**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(சுத்திகரிப்பு பிரிவு)**

**பொதுக்கேள்வி 4427T**

**லைன்குழாய்கள் மற்றும் குழாய் இணைப்புக்களை வழங்குதல்**

விலைமனு ஆவணங்களின் கீழ் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்யும் மேலே குறிப்பிடப்படும் உருப்படியை வழங்குவதற்காக நம்பகமான உற்பத்தியாளர்கள் அவர்களது அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள் (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) இடமிருந்து இலங்கை களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவர் பொறியிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்

ஓர் விலைமனுவை சமர்ப்பிக்கும் எந்த விலைமனுதாரரும், 2022.09.26 வரை எந்த வேலை நாட்களிலும் 1500 மணிக்கு முன்னர் களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பிரிவு காசாளருக்கு அல்லது கொழும்பு -09, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, இல.609, இ.பெ.கூ தலைமையகம், 5ம் மாடி, காசாளருக்கு ஒரு எழுத்து மூல கடிதத்தை வழங்கி,ஓர் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ரூ.1000ஐ செலுத்துதல் வேண்டும்.

அதே நேரம் விலைமனு இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயரைக் குறிப்பிட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மக்கள்வங்கி கணக்கு இல 004100110208633 இற்கு காசாக கட்டணங்களை செலுத்த முடியும்.

கேள்வி நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட விலைமனு ஆவணங்கள் மற்றும் மாதிரிகள் இணையத்தளம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com இல் கிடைக்கும்

பிரதியீடாக கீழ்க்காணும் முகவரியில் இருந்தும் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2022 செப்டெம்பர் 28ம் திகதி 14.30 மணிவரை திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும். அத்துடன் சுத்திகரிப்பு பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் பின்னர் உடனடியாக திறக்கப்படும்

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பிரிவு, சப்புகஸ்கந்த, களனி, இலங்கை**
**தொ.பே : 0094-11-2400110**
**மின்னஞ்சல் : ref.materials@ceypetco.gov.lk**



திகதி 05.09.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4869 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 55,133,677.60 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 0 3 8 9 3 0 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1324 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,596,540.00 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 0 2 5 6 1 2 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,397,986.80

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3111 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,950,760.00 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 02 09 48 67 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,231,738.80

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 899 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,094,340.00 — வெற்றி இலக்கினம் E — வெற்றி இலக்கங்கள் 15 38 69 72 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,413,118.40

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் : 178 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,341,460.00 — இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 20 37 47 49 — விசேட இலக்கினம் கன்னி — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,531,247.20

மெகா பவர் — கோடி 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1217 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,811,160.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 268,939,766.00 — X 05 04 10 49 51 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk



NLDB

**முதலீட்டு வாய்ப்பு**

**இலங்கையின் பாலுற்பத்தி பிரிவு**

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை**

**பெறுகை அறிவித்தல்**

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான பண்ணைகளின் காணிகளை நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல்**

**விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்: 928/lands leasing - long-term/2022 - இறுதித் திகதி 2022/09/27 பி.ப. 2.30 மணி**

கமத்தொழில் அமைச்சினால் இலங்கையின் விலங்கு பராமரிப்பு மற்றும் திரவ பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான இனப்பெருக்க விலங்குகள், பால், இறைச்சி, கமத்தொழில் பயிர்ச்செய்கைக்காக (விலங்கு பராமரிப்புத் தேவையானவை) பாரிய அளவிலான பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான பண்ணைகளின் காணிகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாரிய அளவிலான பாற் பண்ணைகளை நிறுவுவதற்கும் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான விலங்குணவு, விலங்குற்பத்தி, விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுடனான நிறுவனத்திற்கு நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக பின்வரும் அடிப்படை நிபந்தனைகளின் கீழ் கொழும்பு-05, நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பண்ணை | அமைவிடம் | குத்தகைக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கும் காணியின் அளவு (ஏக்கர்) |
|---|---|---|
| போபத்தலாவ பண்ணை | நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு | 1,133 |
| கொட்டுகச்சிய பண்ணை | புத்தளம் மாவட்டம், ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவு | 590 |
| நிகவெரட்டிய பண்ணை | குருநாகல் மாவட்டம், நிகவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவு | 1,054 |
| ஓயாமடுவ பண்ணை | அநுராதபுரம் மாவட்டம், மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவு | 1,477 |
| பரசன்கஸ்வெவ பண்ணை | அநுராதபுரம் மாவட்டம், ரம்பேவ பிரதேச செயலாளர் பிரிவு | 1,632 |
| வீரவில பண்ணை | ஹம்பாந்தோட்டை மாவட்டம், திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவு | 472 |

மேற்குறிப்பிடப்பட்ட பண்ணைகளுக்குச் சென்று பரீட்சித்துப் பார்த்ததன் பின் முன்மொழிவுகளை வழங்கலாம். இந்தப் பரீட்சித்தல் நடவடிக்கைகள் பண்ணையின் கண்காணிப்பின் கீழ் பண்ணை வேலைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

இந்த பண்ணைகளுக்குச் செல்லும் முன் வாரத்தின் சாதாரண கடமை நேரங்களில் கொழும்பு-05, நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் வழங்கல் பிரிவிற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் 2022 செப்டெம்பர் 26ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை குறித்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த பண்ணைகளை நீங்கள் பரீட்சித்துப் பார்த்ததன் பின் உங்களால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்ட முன்மொழிவுகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய பண்ணையைக் குறிப்பிட்டு ''பாரிய அளவிலான பாற் பண்ணைகளை நிறுவுதல் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கான செயற்றிட்ட முன்மொழிவு'' என வெவ்வேறாக தெளிவாகக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2022 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**
**தொலைபேசி: தலைவர்: 0777566233**
**பொது முகாமையாளர்: 0773358736**




### பொலிஸ் தினத்தை முன்னிட்டு

# போக்குவரத்து விழிப்புணர்வூட்டி மாணவர்களுக்கு விஷேட செயலமர்வு

(நிந்தவூர் குறூப் நிருபர்)

பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 156 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு, வீதி ஒழுங்குகள் மற்றும் போக்குவரத்து பற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழவு நேற்று முன்தினம் (05) நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும், பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எம்.அஷ்ரஹ்பின் வழிகாட்டலின் கீழ் இந்நிகழ்வு இடம்பெற்றது.

குறிப்பாக கடந்த சில நாட்களாக நிந்தவூர் பிரதேசத்தில் வாகன விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. இதுபற்றிய விழிப்புணர்வுகளை பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் நோக்கில் இந்நிகழ்வு நடாத்தப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மூலம் ஒவ்வொரு வீடுகளுக்கும் வீதி விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி தெளிவூட்டும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பொலிஸ் சார்ஜன் ஜே.ஆர்.டி.பியல் திசாநாயக்க கலந்து கொண்டு மாணவர்களுக்கு விளக்கமளித்தார். தற்போதைய கால கட்டத்தில் அதிகமாக நிகழும் வீதி விபத்துக்கள் புகைப்பட மற்றும் காணொளி வடிவில் இவர்களுக்கு காட்டப்பட்டது.மேலும் இவ்விபத்துக்கள் ஏற்பட்டமைக்கான காரணிகளையும் மாயவர்களுக்கு தெளிவூட்டி, அவதானமாக நடக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.



பாடசாலை மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய போக்குவரத்து ஒழுங்குகள் பற்றியும் மாணவர்களுக்கு போதிய விளக்கங்கள் வழங்கப்பட்டன. இதுபற்றிய விளக்கங்களை பெற்றோர்களுக்கு தெளிவூட்டுமாறும் மாணவர்கள் பணிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடத்தில், இந்நிகழ்வு பற்றிய மதிப்பீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## மீராபாலிகா மகாவித்தியாலயத்தில் மூன்று மாடிக்கட்டடம் திறந்து வைப்பு



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி கல்விக்கோட்டத்திற்குட்பட்ட மீராபாலிகா மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மூன்று மாடி கட்டடம் நேற்றுமுன்தினம் (05) திறந்துவைக்கப்பட்டது

பாடசாலை முதல்வர் அஷ்ஷெய்க் யூ.எல். மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக பங்கேற்று கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா காத்தான்குடி நகரசபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது கடந்த வருடம் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில், சகல துறைகளிலும் உயர் சித்தி அடைந்த மாணவிகள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின்போது, கட்டடத்தை அமைப்பதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## இளைஞர்களுக்கான தொழில் சந்தை; ஆர்வத்துடன் இளைஞர்கள் பங்கேற்பு

(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் சந்தை நடாத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்ட தொழில் நிலையம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இத்தொழிற் சந்தையானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் தலைமையில் நேற்று (06) இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள், இங்கு நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் பங்கு கொண்டனர்.

இதில், உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர, பிரதம முகாமைத்துவ உதவியாளர் மஹிந்த வனசிங்க, மனிதவள அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் முபாரக், பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.புரபானந்தன் உட்பட தனியார் நிறுவன ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கிண்ணியா நகரசபையின் வருமானத்தை அதிகரிக்க கடலுணவுத்திட்டங்கள்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கிண்ணியா நகரசபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான மற்றுமொரு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இதற்கமைய,

பெரியாற்றுமுனை கிராம பிரிவில் கடலுணவு உணவகம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

இக்கருத்திட்டமானது உலக வங்கியின் நிதி உதவியுடனும், கிண்ணியா நகர சபையின் பங்களிப்புடனும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டமானது உள்ளூராட்சி மன்றங்களின் இயல் அளவை கட்டியெழுப்புவதற்கான உதவித் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இத்திட்டத்துக்காக மொத்தமாக 16 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் உலக வங்கி 14 மில்லியனையும், இரண்டு மில்லியனை சபையும் வழங்கியுள்ளது.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது இப்பிரதேசத்திலுள்ள பெரும்பாலான சுயதொழில் முயற்சியாளர்களின் தனிநபர் வருமானம் அதிகரிப்பதுடன், புதிய தொழில் வாய்ப்புக்களும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது..

மேலும், இப்பகுதியில் இயற்கையாக கடலிலிருந்து பிடிக்கப்படுகின்ற கடற்றொழில் உணவுகள் நியாயமான முறையில் மக்களிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்படவுள்ளது. இவற்றிலிருந்து உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகளுக்கான கடலுணவுப் பொருட்களை தயாரித்து, கிண்ணியா நகரசபையின் வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்வில், கிண்ணியா நகர சபைத் தலைவர், நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டம், யுனிசெப் நிதியுதவி

(கல்முனை குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் காலை சத்துணவு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்திலுள்ள 5058 முன் பள்ளி மாணவர்கள் பயனடையவுள்ளனர். இது தொடர்பான உயர் மட்டக்கலந்துரையாடல் அண்மையில் (05) மாவட்ட செயலக ஆரியரட்ன கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையில் இடம்பெற்றது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் ஒருங்கிணைப்பில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கியதாக 200 முன்பள்ளி பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் 5058 சிறுவர் சிறுமியர் போஷாக்குணவைப் பெறவுள்ளனர். ஒரு மாணவனுக்கு இதற்காக. நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் நான்கு மாதங்களுக்கான தொகையை யுனிசெப் நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இக்கலந்துரையாடலில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.எல்.எம்.றிபாஸ். அம்பாரைப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். சேரசிங்க, இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஸ்ஸான், அம்பாரை வலயக் கல்விப்பணிப்பாளர் எச்.ஆர்.ஹசந்தி, மாவட்ட விவசாயப்பணிப்பாளர் எம். கலீஸ் மாவட்ட செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் எம்.எம்.அனீஸ், முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரஞ்சி விஜேரட்ன அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் ஏ.எல்.இர்பான் உட்பட யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## காரைதீவு பொலிஸ் நிலையத்தில் நேற்று இரத்ததான நிகழ்வு

(காரைதீவு குறூப் நிருபர்)



இலங்கை பொலிஸ் சேவையின் 156 வது வருட நிறைவை முன்னிட்டு காரைதீவு பொலிஸார் நேற்று (06) செவ்வாய்க்கிழமை இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வு காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜகத் தலைமையில் இடம்பெற்றது,.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சுபோதா தலைமையிலான மருத்துவ குழுவினர் இரத்ததான முகாமை நடாத்தினர்.

கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் புத்திக இந்நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டார். பொலிஸாரும் பொதுமக்களும் இரத்தம் வழங்கினர். இதேவேளை, இன்று (07) புதன்கிழமை காரைதீவில் பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து கடற்கரையில் சிரமதான நிகழ்வில் ஈடுபடவுள்ளனர் .

## பாடசாலை வளாகத்தை பயிர் செய்கைக்கு தயார் படுத்தும் திட்டம்



(தோப்பூர் குறூப் நிருபர்)

தோப்பூர் கோட்டத்திற்குட்பட்ட அல்ஹம்றா மத்திய கல்லூரியில். பயிர்ச்செய்கைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலை வளாகத்தை முழுமையாக பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தல் என்னும் தொனிப்பொருளில், இவ்வேலைத்திட்டம் கல்லூரி முதல்வர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து பாடசாலை வளாகத்தில் பயிர் செய்வதற்கான தயார்படுத்தல்களில் ஈடுட்டமை குறிப்பிடத்தக்கது.

## திங்கட்கிழமைகளில் அரச அதிகாரிகள் அலுவலகங்களில் இருப்பதை உறுதிப்படுத்தவும்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண சபையில் பொதுமக்கள் தினமான திங்கட்கிழமைகளில் அதிகாரிகள் கூட்டம் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண சபை அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களை உள்ளடக்கிய அதிகாரிகள் கூட்டம் கடந்த திங்கட்கிழமை (29) பிரதம செயலாளரினால் அவரது அலுவலகத்தில் கூட்டப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநரின் சம்மதத்துடன் கூட்டப்பட்ட இக்கூட்டம் பகல் வரை நீடித்துள்ளது.

இதனால், தமது தேவைகளுக்காக மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து வந்த பொது மக்கள் உரிய அதிகாரிகளைச் சந்திப்பதற்காக மாலை வரை காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. இதனால்,மீண்டும் தமது பகுதிகளுக்குச் திரும்பிச் செல்வதில் பல சிரமங்களை இம்மக்கள் எதிர்நோக்கினர். இதுகுறித்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தனது கவனத்துக்கு கொண்டு வந்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.



திங்கட்கிழமை பொதுமக்கள் தினம் என அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருப்பதால் அத்தினத்திலேயே பொதுமக்கள் அலுவலகங்களுக்கு வருகின்றனர். இந்தத் தினத்தில் பொதுமக்களைச் சந்திப்பதற்குரிய அதிகாரிகளை வேறு கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வது அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணானது.

எனவே, எதிர்காலத்தில் திங்கட்கிழமைகளில் அதிகாரிகள் தமது அலுவலகத்தில் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

## இணைய மூலம் ஆசனப்பதிவு கல்முனையில் ஆரம்பம்

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

கல்முனை பஸ்நிலையத்திலிருந்து தூர இடங்களுக்கான போக்குவரத்தை துரிதப்படுத்தும் நோக்கில், இணையத்தளம் மூலம் ஆசனங்களை பதிவு செய்யும்முறை நடைமுறைக்கு வந்துள்ளது. போக்குவரத்துசபை கல்முனை சாலையின் உதவிமுகாமையாளர் தலைமையில், இந்நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணம்.

கொழும்பு, கண்டி ,மன்னார் மற்றும் புத்தளம் போன்ற இடங்களுக்குச் செல்லும் பஸ் சேவைகளே இணைய வழிகளில் பதிவு செய்யப்படவுள்ளன. பிரயாணிகள் கல்முனை பஸ்தரிப்பு நிலையத்துக்கு சமுகமளித்து,இணயததின் மூலம் தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு.கேட்கப்பட்டுள்ளனர். இத்திட்டம்,முதன் முதலாக அம்பாறை மாவட்ட பிரயாணிகளுக்கு ஒருவரப்பிரசாதகமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சட்டவிரோத போதைப்பொருள் பாவனை; உற்பத்தி, விற்பனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

இளைஞர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு போதைப்பொருள் பாவனை,உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த தகவல்களை வழங்குவதற்கு சில நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.இந்நிறுவனங்களின்,தொடர்பு இலக்கங்கள் அடங்கிய பதாதை மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் (05) அரசாங்க அதிபர் க.கருணாகரனினால் திறந்து வைக்கப்பட்டது.

போதையற்ற நாடு, சௌபாக்கியமான தேசம் எனும் தொனிப்பொருளில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள் கொண்ட பதாதை திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில், ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் வரை பொலிஸ், மதுவரி திணைக்களம், விஷேட அதிரடிப்படையினர், சமுதாய சீர்திருத்த திணைக்களம் மற்றும் உளவளத்துறையினரினால் மாவட்டத்தில் போதைபொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளால் தெளிவுபடுத்தப்பட்டன.

## கைக்குண்டுகள் மீட்பு



சாவகச்சேரி விஷேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி இராசதோட்ட பகுதியிலுள்ள காணியொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் 05/09 திங்கட்கிழமை கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் உழவு இயந்திரம் மூலம் காணியை உழுதுக்கொண்டிருக்கும் போதே வெடிக்காத விதமாக நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுதொடர்பாக காணி உரிமையாளர் கொடிகாமப் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் கைக்குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளுக்கு அரச காணி

கோப்பாய் குறூப் நிருபர்

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரச காணி வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக தமிழ்நாட்டில் சுமார் 58 ஆயிரம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் சுமார் 3ஆயிரம் பேர் மீள இலங்கைக்கு திரும்பவுள்ளனர்.



ஏற்கனவே ஒரு பகுதியினர் இலங்கைக்கு திரும்பியுள்ள நிலையில் படிப்படியாக தாய்நாட்டுக்கு வருகைதருபவர்களுக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

வருகை தரும் குடும்பங்களில் காணி அற்றவர்களுக்கு அரச நிலம் பகிர்ந்தளிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

மேலும் இந்தியாவிலிருந்து வருகை தரும் இலங்கை மக்களுக்கு இந்திய அரசு வழங்கும் வீட்டுத் திட்டத்தின் நிதியை அதிகரிக்குமாறு இந்திய அரசை கேட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம் (தினகரன் Vadakkin Uthayam)

## நீர்வேலியில் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும். சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும் நடைபெற்று வருகின்றன.

37 ஆவது . சொற்பொழிவு நிகழ்வு தாவடி ஸ்ரீ ஆதிகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கிரிஜா பத்மராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை நாவலர்' எனும் தொனிப்பொருளில் சிவநெறிச்செம்மல் க.ஈஸ்வரன் சொற்பொழிவு ஆற்றுவார். சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ.கனகசூரியர்)



மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் மஹோற்சவத் திருவிழாவில் மாதர் பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை தீர்க்கும் முகமாக கற்பூரச் சட்டிகளை தங்கள் கைகளில் ஏந்தியவாறு அம்பிகையுடன் வலம் வந்தனர். படம்: தலைமன்னார் விசேட நிருபர்

## அனுமதிப்பத்திரத்தை மீறி மணல் அகழ்வில் ஈடுபட்ட எட்டு பேர் கைது

யாழ். விசேட நிருபர்

சாவகச்சேரி பொலிஸாரினால் அனுமதிப்பத்திரங்களை மீறி மணலேற்றிச் சென்ற எட்டு டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனங்களை கைதடி பகுதியில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் சோதனையிட்டபோதே மோசடி தெரியவந்தது.

அதனையடுத்து டிப்பர் வாகனங்களை கைப்பற்றிய சாவகச்சேரி பொலிஸார், அனுமதிப்பத்திரங்களை மீறிய சாரதிகளை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சாரதிகளையும், கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## திருமணத்திற்காக நாடு திரும்பிய இளைஞன் விபத்தில் சிக்கி பலி

சாவகச்சேரி விஷேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி பகுதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த இளைஞன் நேற்றுமுன்தினம் 05/09 திங்கட்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. தலையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வரணி பகுதியைச் சேர்ந்த 28 வயதான அருண்குமார் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது திருமணத்திற்காக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பிரான்ஸ் நாட்டிலிருந்து நாடு திரும்பிய போதே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சிங்கப்பூர் மாநாட்டில் வடமாகாண ஆளுநர் பங்கேற்பு

கோப்பாய் குறூப் நிருபர்

சிங்கப்பூரில் நேற்று (06) செவ்வாய்க்கிழமை ஆரம்பமான நம்பிக்கையான அடையாளங்கள், ஒருங்கிணைந்த சமூகங்கள்", வருடாந்த மாநாட்டில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா இலங்கை சார்பில் கலந்து கொண்டார். குறித்த மாநாட்டில் சிங்கப்பூர் அதிபர் ஹலிமா யாக்கோப் சிறப்புரை ஆற்றினார்.




## சுகாதார சேவைகள் பணிமனை அலுவலகத்தில் மரக்கறி செய்கை

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதனின் வழிகாட்டலில் அலுவலகப்பிரிவுகளில் மரக்கறி பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

அதில் மிளகாய், கத்தரி, தக்காளி, பீட்ரூட், வெண்டைக்காய் போன்ற மரக்கறி வகைகள் என செய்கைப்பண்ணப்படுகின்றன. இவை இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகள் இல்லாமல் நஞ்சற்ற வகையில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.

## மலைச்சாரல்

## கலஹா பாடசாலையில் மண்சரிவு அனர்த்தம்

கம்பளை நிருபர்

கலஹா பாடசாலையில்மண்சரிவு அனர்த்தமொன்று ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு பெய்த கடுமையான மழை காரணமாக இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கலஹா / ஸ்ரீ சண்முகா ஆரம்ப வித்தியாலயத்தின் இரண்டு மாடி கட்டடத்தின் பின்பகுதியிலேயே மண்மேடு சரிந்துள்ளது.



இதனால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அச்சத்துடனே இருக்கின்றனர். நேற்று காலை வகுப்பு மாணவர்களுக்கு விடுமுறை அளித்திருந்தனர்.

பாடசாலை கட்டடத்தில் வெடிப்பு ஏற்பட்டிருப்பதையும் காணமுடிந்தது.

பாடசாலை அதிபர் மூலமாக கண்டி கோட்ட கல்வி பணிப்பாளர், அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டார்.

# அவிசாவளை - கேகாலை பிரதான வீதியில் வெள்ளம்

அவிசாவளை நிருபர்

கேகாலை மாவட்டத்தில் கடும் மழையினால் அவிசாவளை கேகாலை பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் அங்குருவெல்ல, ருவன்வெல்ல நகரங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குருவெள்ள நகரம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதுடன் வியாபார நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கும் நீர் புகுந்து இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அங்குருவெள்ள குருகொடை ஆறு மற்றும் ரிடி கஹ ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்து வெள்ளம் ஏற்பட்டமையால் இந்நிலை உருவாகியுள்ளது.





இதனால் இதனை அண்டிய கன்னந்தொட்டை, அங்குருவெல்ல, ருவன்வெல்ல பிரதேச மக்கள் பாதிப்புக்களை சந்தித்துள்ளனர். பல வீடுகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

தேசிய கட்டட ஆய்வு மையத்தால் எட்டியாந்தோட்டை, புளத்கோபிட்டிய, கேகாலை, கலிகமுவ, மாவனல்லை, ரம்புக்கன மற்றும் வரக்காபொல பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் களனி ஆறும் பெருக்கெடுத்து இருப்பதால் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# நோர்வூட் த.ம.வித்தியாலயத்திலிருந்து 44 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு

கொட்டகலை தினகரன் நிருபர்

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட கோட்டம் இரண்டின் நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து 44 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 2022.08.28ஆம் திகதி வெளியிடப்பட்ட க.பொ.த உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளின் படி 44 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

